# இந்தியப் படை இருப்பதை கண்டித்தவர்கள் தமிழர்கள் அழிக்கப்பட்டதை கண்டிக்கவில்லை!

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் இந்தியப் படையினர் நிலைகொண்டிருந்ததை இலங்கையின் சகலபகுதியினரும் வன்மையாகக்கண்டித்தனர், ஆனால் அப்பாவிப் பொதுமக்கள் இந்தியப்படையினரால் படுகொலை செய்யப்பட்டதை தென்பகுதியைச் சேர்ந்த எவருமே கண்டிக்கவில்லை'',

**- மாத்தயா**

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு கோ. மகேந்திரராசா (மாத்தயா) கொழும்பு பத்திரிகை ஒன்றுக்களித்த பேட்டியில் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்:

(8ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர்: 32 பங்குனி: 14 ஷஃபான் பிறை: 29 இதழ்: 43
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 27-03-1990

யாழ். நகரில்—

## பாப்பரசரின் பிரதிநிதிக்கு கோலாகல வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

பரிசுத்த பாப்பரசரின் பிரதிநிதி பேரருள் திரு பிரன்சுவா பக்கே, அவர்கள் பல்லாயிரக்கணக்கான யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க மக்களால் நேற்று மாலை யாழ். ஆசனக் கோவில் முன்றலில் வைத்து கோலாகலமாக வரவேற்கப்பட்டார்.

யாழ். ஆயர் அதிவண. தியோகுப்பிள்ளை ஆண்டகை தலைமையில் நூற்றுக்கணக்

(8ம் பக்கம் பார்க்க)

★ 1990-ம் ஆண்டுக்கான

# நிதி கிடைத்தால் மக்களுக்கு புதிய நிவாரணம் வழங்கலாம்!

## யாழ். அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

**1990-ம் ஆண்டுக்கான புனர்வாழ்வு மதிப்பீட்டுத் திட்டத்தை கொழும்பிலும், திருகோணமலையிலுமுள்ள உயர்பீடத்துக்கு அனுப்பி வைத்திருக்கிறோம். அதற்கான நிதி கிடைத்தால் 1989ம் ஆண்டு தொடர்ச்சியும், 1990ம் ஆண்டுக்கான புதிய புனர்வாழ்வு நிவாரணங்களையும் மக்கள் பெற்றுக்கொள்வார்கள்.**

இவ்வாறு, யாழ். செயலகத்தில் நேற்று நடந்த பத்திரிகையாளர்மகாநாட்டில் யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிறட் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது, 'இரண்டாயிரம் ரூபா மீளக் குடியமர்த்துவதற்கான நிவாரணம் ஒரு லட்சத்து 50,000 குடும்பங்களுக்கு வழங்கியுள்ளோம், இன்னும் 39,000 குடும்பங்களுக்கு வழங்க வேண்டியிருக்கிறது

இந்தப் பணத்தை மேலிடத்திலிருந்து பெறுவதில் மும்மரமாக ஈடுபட்டிருக்கிறோம். பணம் கிடைத்ததும் இவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும். ஏற்கனவே வங்கிகளில் இப்பணத்தை எடுக்காது சில பேர் இருக்கிறார்கள். அவர்கள் வங்கிகளில் உடனடியாக சென்று இப்பணத்தை எடுக்கவேண்டும்.

'சுயதொழிலுக்கான கடன் 4000 ரூபா 105,000 பேருக்கு கொடுக்கத் திட்டமிடப்பட்டது. ஆனால் 60,000 பேருக்

[8ம் பக்கம் பார்க்க)

மேற்கு ஜெர்மன்—

## பல்கலைக்கழக அனுமதி பற்றிய கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மேற்குஜெர்மனியில் உள்ள பல்கலைக்கழகங்களில் சேர விரும்புவோருக்குத் தேவையான அறிவுறுத்தல்களையும் வழிகாட்டல் குறிப்புகளையும் பற்றிய விளக்கக்கூட்டம்30-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி ஆரம்ப பாடசாலையில் நடைபெறும்.

மேற்குஜெர்மன் பல்கலைக்கழக தமிழ் மாணுக்கர் சேவையும், ஜெர்மன் கலாசார சபையும் இக்கூட்டத்தினைஇணைந்து நடத்துகின்றன.

தகுதியும் ஆர்வமுமுள்ள மாணுக்கரும், பெற்ருேரும் இதில் கலந்து கொள்ளலாம். க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஐந்துதிறமைச் சித்திகளோடு ஆறு பாடங்களும் க. பொ. த. உயர்தரபரீட்சை

(8ம் பக்கம் பார்க்க)

## இன்று செஞ்சிலுவைச் சங்க கொடி தினம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாணப் பிரிவு இன்று 27 ம் திகதி கொடிதினம் அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

அடுத்த வாரம்

## மாகாண சபை கலைப்பு பற்றி புலிகள் ஜனாதிபதி பேச்சு

(திருமலை)

வடக்கு-கிழக்கு மாகாண சபையைக் கலைத்துவிட்டு, புதிதாகத் தேர்தல் நடத்துவது தொடர்பாக ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர்கள் அடுத்த வாரம் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

இத்தகவலைப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் லெப். ஜெனரல் சிறில் ரணதுங்க ஊர்ஜிதப்படுத்தியுள்ளார்.

இது தொடர்பாக விடுதலைப் புலிகள் தெரிவிக்கையில்: வடக்கு-கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டு, புதிய தேர்தலுக்கான திகதி குறிப்பிடப்பட்டால் எமது தேர்தல் விஞ்

[8-ம் பக்கம் பார்க்க]

## பலாலியில் புலிக்கொடி!

(காங்கேசன்துறை)

இந்திய அமைதிப் படையினர் பலாலிப் பகுதியைவிட்டு முழுதாக வெளியேறியதையடுத்து அப்பகுதியெங்கும் புலிக்கொடிக்கள் பறக்கவிடப்பட்டுள்ளன.

(8ம் பக்கம் பார்க்க)

"போராட்டத்தினால்—

## 1356 வீர வேங்கைகளையும் 25,000 மக்களையும் இழந்துள்ளோம்

**- காஸ்ரோ**

(புங்குடுதீவு)

''எமது போராட்டத்தின் மூலமாக 1,356 வீர வேங்கைகளையும், 26,000க்கும் மேற்பட்ட மக்களையும் இழந்த நிலையில், அவர்களது கல்லறைகளுக்கு மண்போட்டுச்சென்றுதான் ஒரு அமைதியான சூழ்நிலையினை நாம் இப்போது பெற்றிருக்கின்றோம். போராட்டத்தின் மூலமாகப் பல வீரதீரச் செயல்களைப் புரிந்து, தமிழ் மக்களின் உரிமைகளையும், மண்ணையும் மீட்டெடுப்பதற்குக் களத்திலே குதித்து, உயிர்த் தியாகம்செய்து, இரத்தம் சிந்தியதாலேயே நாம் இன்று அமைதியான சூழ்நிலையைப் பெற்றிருக்கிறோம்.''

(8-ம் பக்கம் பார்க்க)

## இன்று அடையாள உண்ணாவிரதம்

(காங்கேசன்துறை)

அன்னை பூபதியின் நினைவு நாளையொட்டி, ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் இன்று மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் தெற்கு வீதியில் நடைபெறுகிறது

(8ம் பக்கம் பார்க்க)

## வடக்குகிழக்கில் சொத்துக்கள், உடமைகள் இழப்பு 68 கோடி ரூபா!

### நிவாரணம் வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் அண்மைக் காலத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது சொத்துகளுக்கும், உடமைகளுக்கும் ஏற்பட்ட இழப்பு சுமார் 68 கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதன்மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கும் நடவடிக்கையில் புனர்வாழ்வு, புனர்நிர்மாண அமைச்சு தற்போது ஈடுபட்டுவருகிறது.

எனினும் மேற்படி பகுதிகளில் பாதிக்கப்பட்டவர்களின் சரியான விபரங்களைத் திரட்டும் பணி தாமதப்படுவதால் நிவாரணப்பணிகள் தடைப்பட்டிருப்பதாகவும் இதனைஉடனடியாக மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட உதவி அரசாங்க அதிபர்கள் பணிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## நட்புறவு உடன்படிக்கை; விரைவில் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

இலங்கை-இந்திய நட்புறவு உடன்படிக்கை தொடர்பான பேச்சுவார்த்தைகள் அடுத்த இரு வாரங்களில் ஆரம்பமாகவுள்ளது. முதலில் அதிகாரிகள் மட்டத்தில் இந்தப்பேச்சுவார்த்தைகள் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியப்படைகள் இலங்கை

(8ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காய, பீற்றூட், கோவா, விதைகள் விற்பனைக் குண்டு பிள்ளையார், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி 3625)

### கோழிக்குஞ்சு விற்பனைக்கு

Prima Lohmann சிவப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகள், புறேயிலர் குஞ்சுகள் கறுப்பு, சிவப்பு சேவற்குஞ்சுகள் Golden Comet, HylineBlack, பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய், புதன்கிழமைகளில் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். Nallur Farm Centre, C/o நல்லூர் வீடியோ சென்டர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி 3505)

### நாடக நூல்கள்

O/L தமிழ் மொழி பாடத்திட்டத்தில் வானொலி நாடகமும் உள்ளது. அதைக் கற்பதற்குப் பயன்படக்கூடிய இரண்டே இரண்டு நூல்கள். கெட்டிக்காரர்கள் ரூபா 25/-, முதலாம்பிள்ளை ரூபா 30/-, அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதியவை. (சி-3639)

### WANTED

Experienced middle age Sales Rep. required urgently. Salary & commission. Apply: Brite Soap Ind, K. K. S. Road, Mallakam. (C-3645)

### தேவை

ஆங்கிலம் பேசக்கூடிய பெண் பங்காளர் தேவை. எமது நிறுவனத்தின் பங்களிப்புகளில் கவனம்செலுத்தி நிறுவனத்தின் வளர்ச்சியில் பங்கு கொள்ளக்கூடியவர்கள் விரும்பத்தக்கது. 31-03-90க்கு முன் கடித மூலம் தொடர்பு கொள்ளவும். தமிழ் பல்துறை சேவை, 28, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சி-3653)

### பேக்கரி

பேக்கரி புதிதாகக் கட்டுவதற்கும், திருத்துவதற்கும் எம்முடன் தொடர்புகொள்ளவும். பணிப்பாளர், தமிழ் பல்துறை சேவை, 28, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சி-3654)

## தபால் அதிபர் இலை

(புங்குடுதீவு)

புங்குடுதீவு தபால் கந்தோருக்கு நிரந்தர தபாலதிபர் ஒருவர் நியமிக்கப்படாமல் கடந்த ஒரு வருடத்துக்கு மேலாகியுள்ளது.

தபால் அதிபர் திரு மு ஞானப்பிரகாசம் ஓய்வு பெற்றதிலிருந்து இன்னமும் நிரந்தரமாக ஒருவர் நியமிக்கப்படாத நிலையில் இருக்கின்றது. (101)

## வருடாந்த உற்சவம்

(காங்கேசன்துறை)

தெல்லிப்பழை மகாமாரி அம்பாள் வருடாந்த உற்சவம் இம்மாதம் 30-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெறும் உற்சவத்தில் ஏப்ரல் 7-ம் திகதி இரதோற்சவமும், மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (86)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### இலங்கை

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 990 ஏப்ரல் 27-ம் திகதி வரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

**1. தற்காலிக உதவி விரிவுரையாளர்**

மெய்யியல்
நாடகமும் அரங்குக் கலைகளும்
நுண்கலைகள் பற்றிய வரலாறு
கிறிஸ்தவ நாகரிகம்
அரபு மொழியும் இஸ்லாமிய நாகரிகமும்
ஆங்கில இலக்கியம்
புவியியல்
இந்து நாகரிகம்
பொருளியல்
அரசறிவியல்
வர்த்தகமும் முகாமைப் படிப்புக்களும்
தமிழ்
சித்த மருத்துவம்

**. தற்காலிகப் போதனாசிரியர்**

ஆங்கிலம்
கர்நாடக வாய்ப்பாட்டு
மிருதங்கம்
பரத நாட்டியம்

**3. தற்காலிக கட்டுரை ஆசிரியர்**

சமஸ்கிருதம்
புவியியல்
சரித்திரம்

**4. தற்காலிக செய்முறை காட்டுநர்**

சித்த மருத்துவம்

**5. இடைவரவு விரிவுரையாளர்**

நாடகமும் அரங்குக் கலைகளும்
அரபு மொழியும் இஸ்லாமிய நாகரிகமும்
கிறிஸ்தவ நாகரிகம்
ஆங்கில இலக்கியம்
நில அளவீடு [புவியியல்]
சட்டம்
முகாமைத்துவமும்
ஒழுங்கமைப்பு
நடத்தையும்
கணக்கியலும்
கணக்காய்வும்
வரிவிதிப்பு
சமஸ்கிருதம்

**6. இடைவரவுப் போதனாசிரியர்**

கர்நாடக வாய்ப்பாடு
வயலின்
வீணை
மிருதங்கம்
பரத நாட்டியம்

**குறிப்பு:**

சரித்திரத்தில் தற்காலிக கட்டுரை ஆசிரியர்: பரீட்சையின் பெறுபேறுகளுக்காகக் காத்திருப்பவர்களும் விண்ணப்பிக்கலாம்.

இப் பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளையின் சிரேஷ்ட உதவிப்பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களைப் பெறவிரும்புவோர் சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப்பட்ட 23 X 10 செ. மீ. அளவுடைய கடித உறையை அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பட்ட படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள் அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களின் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

— பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
23 03.1990.

[ஏ-637]

## நிர்வாகிகள்

[யாழ்ப்பாணம்]

கோப்பாய் நாவலடி சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நிலைய மண்டபத்தில் நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: சு. தயானந்தேஸ்வரன், செயலாளர்: பொ. கு. திருக்குமரன், பொருளாளர்: சு சிவசபேசன் உட்பட பன்னிரண்டு பேர் கொண்ட நிர்வாகசபை உறுப்பினர்களும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர். (க)

## கோமாரியினால் மாடுகள் பாதிப்பு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்புப் பகுதியில் மாடுகள் திடீரென இறக்கின்றன.

வீடுகளில் வளர்க்கும் விலை உயர்ந்த நல்ல இன பசுக்கள் கோமாரி போன்ற தொற்று நோய்களினால் பாதிக்கப்பட்டு திடீர் திடீரென இறக்கும் சம்பவங்கள் இப்பகுதியில் அதிகரித்துவருகின்றன.

கடந்தவாரம் பண்டத்தரிப்பு கீரிமலை வீதியைச் சேர்ந்த விவசாயி ஒருவருக்கு சொந்தமான ''ஜெர்சி'' இன பசுமாடு உட்பட பல மாடுகள் இறந்துள்ளன.

இதனால் பசு மாடு வளர்ப்பில் ஈடுபட்டுள்ளவர்கள் பெரும் கவலையடைந்துள்ளனர். (72)

## உணவுப் பொருட்கள் திரும்பின

(கொழும்பு)

அநுராதபுரத்திலிருந்து ரயில்மூலம் மன்னாருக்கு அனுப்பட்ட உணவுப்பொருட்கள் மீண்டும் அநுராதபுத்திற்கே வந்துசேர்ந்துள்ளன.

700 மெட்றிக்தொன் உணவுப் பொருட்கள் மாத்திரமே மன்னார் ரயில்வே களஞ்சியப் பகுதியில் சேமித்துவைக்க முடியும் என்றும் முருங்கன் களஞ்சியபபகுதியும் சேதமுற்றிருப்பதால் அங்கும் உணவுப் பொருட்களை களஞ்சியப் படுத்தமுடியாதுள்ளது என்றும் சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க)

## இடிந்த நிலையில் மதகு

(பண்டத்தரிப்பு)

மாதகல்-பண்டத்தரிப்பு பிரதான வீதியில் பாணவெட்டி குளத்திற்கு பககத்திலுள்ள பெரிய மதகு இடிந்த நிலையில் நீண்ட காலமாக இருந்துவருகின்றது.

வாகனங்களும், பிரயாணிகளும் ஒரு பக்க வழியினால் மிகுந்த சிரமத்தின் மத்தியில் போய்வருகின்றனர்.

எந்த நேரத்தில் முற்றாக இடிந்து விழுமோ என்று தெரியாத நிலையில் இந்த மதகு காணப்படுகிறது.

மாதகல் விபுலானந்தர் சனசமூக நிலையம் இந்த மதகைத் திருத்தியமைக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (72)

## கிளிநொச்சி மாவட்டத்தில் எண்பதாவது பாடசாலை!

(மருதங்கேணி)

கிளிநொச்சி மாவட்டத்தில் எண்பதாவது பாடசாலை உருத்திரபும் கொத்தணியில் உள்ள ஊற்றுப்புலத்தில் திறந்துவைக்கப்படவுள்ளது.


நாளை 28ம் திகதி புதன்கிழமை திரு. சி கந்தசாமி தலைமையில் இவ் வைபவம் நடைபெறவுள்ளது.

இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத் தலைவர், பேராசிரியர் திரு. கா சிவத்தம்பியும். கௌரவ விருந்தினராக கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகரும் சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதமும் கலந்துகொள்வார்கள்

அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் உதவியோடு இப்பாடசாலை நிர்மாணிக்கப்பட்டுள்

(5ம் பக்கம் பார்க்க)

## இறையடியில் இணைந்த ஆறும் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் R. A. பிரான்சிஸ் றணசிங்க**
(Police Sergeant, Jaffna Police Station)

படைப்பு: 21-10-1950 — அழிப்பு: 27-03-1984

ஆறு ஆண்டுகள் சென்றும் இன்னும் நீங்கவில்லை துயரலைகள். ஆவி விடுத்துப்போன பின்பும் ஆயிரமாய் கலங்குகின்றோம். எம் மனைவிளக்கின் ஒளி நீங்கள்; எமக்காக உடல், பொருள், ஆவி அனைத்தையும் ஈர்ந்த எமது அன்பு பப்பாவுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் காலை 6-00 மணிக்கு துக்கத் திருப்பலிப்பூசை ஒப்புக் கொடுக்கப்படும். என்றும் உம் நினைவிலும் வழியிலும் வாழும்

அன்பு மனைவி,
அருமைப் பிள்ளைகள்

துண்டி றோட்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

(சி 3652)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



**அமரர் கந்தசாமி ஜெகநாதன்**
**[ஜெகன்]**

கருவறையிலிருந்து வெளிநடப்பு: 1958-12-19 — உலக நெஞ்சறைகளில் வீற்றிருப்பு: 1990-02-26

'ஜெகன் ஜெகன்' என்றிச் செகம் புகழ் தலைவ!
செகத்தினை விடுத்துநீர் பரன்பதம் அடுத்திர்
வற்றுப் பனையாளை வல்லி புரத்தானை
பற்றுயப் பணிந்தனை; பரன் பதம் பற்றினை;
தானமும் தவமும் தர்மமுஞ் செய்தனை;
போனகத் தானமும் பொருந்தவே செய்தனை;
முதலாளி யாகவே விளங்கிய போதிலும்
இதமுடன் நற்றொழி லாளருக் குதவினை;
இடும்பை அறியா இயல்பின னாகவே
குடும்பத் தலைவனாய் விளங்கிய கோனே!
அள்ளி அள்ளி ஆதுலர்க் கீந்தே
வள்ளலாய் விளங்கிய நம்மில்லத் தலைவா!
அன்பு மனைவியும் அருமைமக் களும்யாம்
துன்புற் றிங்கே தொடர்ந்திருந் தரற்ற
சடுதியி லிந்தத் தரணியை விடுத்தே
கடுகினீர் சிவனார் கழலிணை யடிகளை
அடைகநின் ஆத்மா அரியநற் சாந்தி
அடைக! அடைக! அடைகநற் சாந்தி.

நின் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள், பெற்றோர்

நெல்லியடி,
கரவெட்டி.

[சி 3651)

# சோவியத் நெருக்கடி லிதுவேனிய குடியரசில் மோதல் சூழ்நிலை

# இருபக்க படைகளும் தயார்நிலையில் பேச்சுக்களும் தொடர்கிறது

[மாஸ்கோ]

லிதுவேனிய குடியரசில் சோவியத் படைகள் சென்றதையடுத்து அங்கு பெரும் யுத்த சூழ்நிலை உருவாகியுள்ளது, லிதுவேனிய விடுதலைப் படைகளும் சோவியத் படைகளும் தத்தமது பகுதிகளில் தயார் நிலையில் நிலைகொண்டுள்ளன.

இதற்கிடையில் சோவியத் படைத் தளபதிகள் மூவர் லிதுவேனிய குடியரசுத் தலைவருடன் பேச்சுக்கள் நடத்தி வருகிறார்கள்.

லிதுவேனியா ஒரு தலைப்பட்சமாக குடியரசாக பிரகடனப்படுத்தப்பட்டதையடுத்து அங்கு பெரும் குழப்ப நிலை தோன்றியுள்ளது. ஜனாதிபதி கொர்பச்சேவ் விடுத்த பல எச்சரிக்கைகளை லிதுவேனிய குடியரசுத் தலைவர்கள் உதாசீனப் படுத்தியதையடுத்து அங்கு சோவியத் படைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

சுமார் 60 டாங்கிகள் சகிதம் 1,500 படை வீரர்கள் நவீன ஆயுதங்களுடன் தற்போது லிதுவேனிய தலைநகரில் நிலைகொண்டுள்ளனர். எந்த நிலையையும் சமாளிக்கும் விதத்தில் இவர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர். இதேவேளை வேறு முக்கியபகுதிகளில்குடியரசு சார்ப்பு படைகளும் தயார் நிலையில் நிற்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையை சமாளிக்க லிதுவேனிய குடியரசுத் தலைவருடன் சோவியத்படை உயர் தளபதிகள் மூவர் பேச்சுக்கள் நடத்தி வருகிறார்கள். எனினும் பேச்சுக்களின் விபரம் எதுவும் வெளியிடப்படவில்லை.

### இனக்கலவரம்

இது இவ்வாறிருக்க சோவியத்தின் மற்றிரு மாநிலங்களான ஆர்மேனியா, அஸர்பைசான் எல்லைப் பகுதிகளில் இனக்கலவர மோதல்கள் இடம்பெற்று வருகிறது. பலபேர் கொல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(சி,

---

மேகாலயா சட்டசபை

## ஆறு இந்திரா காங்கிரஸ் அமைச்சர்கள் ராஜினமா!

[புதுடில்லி]

இந்தியாவில் மேகாலயா சட்டசபையில் ஆறு இந்திரா காங்கிரஸ் அமைச்சர்கள் பதவி விலகியுள்ளதையடுத்து கூட்டாட்சியில் பெரும் சிக்கல் நிலை தோன்றியுள்ளது.

மேகாலயாவில் கடந்த வருட பிற்பகுதியில் நடைபெற்ற சட்டசபைத் தேர்தலில் எக்கட்சிக்கும் பெரும்பான்மைப்பலம் கிடைக்காததால் இந்திரா காங்கிரஸ் மேகாலயா ஐக்கிய முன்னணியுடன் இணைந்து ஆட்சியமைக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

உட்கட்சிப் போராட்டத்தினல் நேற்று முன்தினம் மேற்படி ஆறு இந்திரா காங்கிரஸ் அமைச்சர்களும் தமது பதவிகளை ராஜினமா செய்துள்ளனர். இதையடுத்து கூட்டரசு நம்பிக்கை வாக்கெடுப்பு ஒன்றையும் எதிர்நோக்கும் நிலையிலுள்ளது. (சி)

---

## சுவிஸ் வங்கியில் நுழைந்து 20 கோடி டாலர் கொள்ளை!

### 4 முகமூடித் திருடர்கள் கைவரிசை

(ஜெனிவா)

சுவிற்சர்லாந்தில் கடந்த 20 வருடங்களில் மிகப் பெரிய வங்கிக் கொள்ளை நேற்றுமுன்தினம் ஜெனிவாவில் இடம்பெற்றுள்ளது. இக் கொள்ளையில் சுமார் 20 கோடி அமெரிக்க டாலர் பெறுமதியான பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

சுவிற்சர்லாந்து யூனியன் வங்கியில் கிளையொன்றில் இக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது, பலத்த பாதுகாப்பின் மத்தியிலிருந்த இவ் வங்கிக் கிளையில் நான்கு முகமூடித் திருடர்கள் மேற்கொண்ட துணிகர கொள்ளை முயற்சி பொலிஸ் வட்டாரத்தில் பலத்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நண்பகல் வேளையில் வங்கியினுள் நுழைந்த நான்கு பேர் திடீரென காசாளரின் அறைக்குள் முகமூடி அணிந்தவாறு நவீன ஆயுதங்களுடன் நுழைந்தனர். அறைக்குள் அவரை கட்டிப்போட்டு அங்கிருந்து சுமார் 20 கோடி அமெரிக்க டாலர் பெறுமதியான பணத்தை தாம் கொண்டுவந்த பைகளுள் திணித்து வங்கியை விட்டு வெளியேறினர்.

இவர்கள் வெளியேறுவதை பலர் அவதானித்திருந்தனர். ஆனல் இவர்கள் பணம் திருடியதை எவருமே காணவில்லையென்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த நால்வரைத் நேடி பொலிஸார் பலத்த தேடுதலில் இறங்கியுள்ளனர். (சி)

---

பண்டத்தரிப்பில்

## ஏப்பிரல் 8-ம், 9-ம் திகதிகளில் தமிழ்த்தின போட்டிகள்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி அலுவலக பிரதேசத்திலுள்ள கொத்தணிகளுக்கிடையிலான தமிழ்த்தினப் போட்டிகள் ஏப்பிரல் 8-ம், 9-ம் திகதிகளில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

கொத்தணி மட்டத்தில் நடாத்தப்பட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகளை தமது அலுவலகத்திற்கு இம்மாதம் 29-ம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு பண்டத்தரிப்பு கோட்டக்கல்வி அலுவலக உதவிக்கல்விப் பணிப்பாளர் சகலகொத்தணி அதிபர்களையும் கேட்டுள்ளார்.

ஒருபாடசாலை ஐந்து போட்டிகளுக்கு மேல் இந்த கோட்டக்கல்வி அலுவலக மட்டத்திலான போட்டியில் பங்குபற்ற அனுமதிக்கப்பட மாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (72)

---

## புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி

(மானிப்பாய்)

கடந்த 89 - ம் ஆண்டு நடைபெற்ற 5-ம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையில் மானிப்பாய் செள். ஆன்ஸ் பாடசாலையைச் சேர்ந்த செல்வி வரதராசா தயாதுஷா, சிவபாதம் மைதிலி, மகாலிங்கம் சுபோதினி ஆகியோர் சித்தியடைந்துள்ளனர்.

---

## ஆப்கான் கெரில்லா தலைவர் சுட்டுகொலை

(இஸ்லாமாத்)

ஆப்கான் முஜாகுதீன் கெரில்லா இயக்க தலைவர் ஒருவரும் ஐந்து முக்கிய சகாக்களும் நேற்று முன் தினம் பாகிஸ்தானில் பெஸாவார் நகரில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்,

ஆப்காது கெரில்லாக்களில் முக்கிய குழுவின் தலைவரான ஜனப் முலாக்நஸீன் அக்குன் சாட்டும் அவ்வமைப்பின் முக்கிய ஐந்து தலைவர்களும் பெஸாவாரிலுள்ள தமது தலைமை அலுவலக கட்டிடத்துள் நுழையும்போது இனம் தெரியாத ஆயுதக் கோஷ்டி ஒன்றினல் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இக் கொலையை பாகிஸ்தான் அரசு வன்மையாக கண்டித்துள்ளதுடன் இவ்வாறன நடவடிக்கைகள் ஆப்கானில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் எச்சரித்துள்ளது. (சி)

---

## பிறப்பு அத்தாட்சிப் பத்திர படிவங்களுக்குத் தட்டுப்பாடு!

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதி மக்கள் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு பலத்த இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். இவ்வலுவலகத்தில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களை எழுதுவதற்கான படிவங்கள் இல்லாமையாலேஇப்பகுதிமக்கள் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள முடியாமல் அவதியுறுகின்றனர்.

இன்று மக்களுக்குப் பல்வேறு தேவைகளுக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் மிக முக்கியமாகின்றன. நேர்முகப் பரீட்சைகளுக்கு புனர்வாழ்வு, நடவடிக்கைகளுக்கு அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நிவாரண உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு போன்ற தேவைகளுக்குபிறப்புச் சாட்சிப் பத்திரங்கள்இன்றி எதுவும் செய்ய முடியாதுள்ளது.

பொதுமக்கள் இவ்வின்னல்களை நீக்கும் முகமாக இவ் அலுவலகத்திற்கு வேண்டிய படிவங்களை உடன் அனுப்பி வைக்குமாறு பருத்தித்துறை உதவி அரச அதிபர் பிரிவு பாவனையாளர் சங்கச் செயலாளர் பதிவாளர் நாயகத்தைத் தந்தி மூலம் கேட்டுள்ளார். (52)

---

## கைப்பணி கண்காட்சி

(உடுவில்)

மருதனுமடம் இராமநாதன் கல்லூரியில் உடை அமைத்தல், கைப்பணி கண்காட்சி ஒன்று நடாத்தப்பட்டது. முறைசாராக் கல்வி தொழில்நுட்ப பிரிவின் ஆதரவில் இங்கு நடைபெற்றுவரும் ஹோட்டல் முகாமைத்துவ பயிற்சி பெறுவோரால் கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டது.

மேற்படி பயிற்சியாளர்களால் தயாரிக்கப்பட்ட தையல் வேலைகள், கழிவுப் பொருட்களிலிருந்து தயாரிக்கப்பட்ட பூவகைகள், பொம்மைகள், முட்டைகளிலிருந்து தயாரிக்கப்பட்ட விளையாட்டுப் பொருட்கள், துணிகளில் நிறம் தீட்டல், லேஸ்வகைகள் போன்ற பல்வேறு உருப்படிகள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. (109)

---

## நிக்கரகுவா ஹொன்ரு படை தாக்குதலில் 12 இராணுவத்தினர் பலி

### சமாதானப் பேச்சில் தடங்கல்

(மனகுவா)

நிக்கரகுவாவில் அமெரிக்க ஆதரவு 'ஹொன்ரு' கிளர்ச்சிப் படைகள் மேற்கொண்ட திடீர் தாக்குதல் ஒன்றில் ஆறு உயர் இராணுவ அதிகாரிகள் உட்பட 16 சண்டினிஸ்ர இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். இச்சம்பவம் அங்கு மோசமான நிலைமைகளைத் தோற்றுவிக்கும் சாத்தியங்களை ஏற்படுத்தியுள்ளது.

'ஹொன்ரு' கிளர்ச்சிப் படையை கலைப்பது தொடர்பாக ஜனாதிபதி திரு. ஒட்டேகாவின் பிரதிநிதிகளுக்கும் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஜனாதிபதி திருமதி வலேற்ராவின் பிரதிநிதிகளுக்கும் பேச்சுக்கள் ஆரம்பமாகிய சுமார் 4 மணித்தியாலங்களில் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

'ஹொன்ரு' கிளர்ச்சிப் படைகள் கலைக்கப்பட்ட பின்பே ஆட்சி கைப்பற்றப்படுமென திரு. டானியல் ஒட்டேகா அறிவித்ததும் அது தொடர்பாக சமாதான பேச்சுக்கள் நேற்று முன் தினம் ஆரம்பமானதும் தெரிந்ததே.

இத்தாக்குதல் சம்பவத்தையடுத்து 'சண்டினிஸ்ர' இராணுவத்தின் கெரில்லாக்களுக்கு எதிராக பெரும் தாக்குதல்களை மேற்கொள்ளும் தீவிர முயற்சியில் தற்போது அரசு ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [சி]

---

## சுகாதார ஊழியருக்கு பண்டிகை முற்பணம்

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்திலும், கிளிநொச்சி மாவட்டத்திலுமுள்ள சுகாதார திணைக்கள ஊழியர்களுக்கு எதிர்வரும் தமிழ் புதுவருடப் பிறப்பை முன்னிட்டு பண்டிகை முற்பணம் விரைவில் வழங்கப்படவுள்ளது.

கடந்த ஆண்டு பண்டிகை முற்பணம் பெற்று அதை முறையாக திருப்பி செலுத்தியவர்களுக்கே இவ்வருட பண்டிகை முற்பணம் வழங்கப்படும் என்று யாழ் பிரதேச சுகாதாரசேவைப்பணிப்பாளர் அலுவலகம் அறிவித்துள்ளது, (72)

மணிவாக்கு

''எவர் எது சொன்னாலும் கேட்டுக் கொள். உனக்கு சரியென்று தோன்றுவதைச் செய்.''

— மகாத்மா காந்தி

# நமது நோக்கு

## தொல்லியல் ஆய்வு விரிவடைய வேண்டும்!

இன்று ஈழத்திலே புதிய வரலாறு படைக்கப்பட்டு வருகின்றது. வடக்கு - கிழக்குப் பகுதிகளிலே விழிப் புணர்ச்சி ஏற்பட்டுள்ளது இது சிறந்த எதிர்காலத் திற்கு வழிசமைக்கவேண்டும்.

இப்பகுதிகளிலே காணப்படும் சில தொல்பொருள் களைக் கொண்டு இந்தநாடு முழுவதும் ஒரு இனத் தவர்களுக்கே சொந்தம் என்று வாதாடப்பட்டு வந் தது. இக்கருத்தினை வெளியுலகிற் பரப்பிடவும் முயற் சிகள் மேற்கொள்ளப்பட்டன.

அண்மையில் நடந்த பாராளுமன்றக் கூட்டத் தொடரிற்கூட, நயினாதீவு, புங்குடுதீவு. தீகவாவி போன்ற இடங்களைப் பற்றியும் சில எதிர்க்கட்சி உறுப் பினர்களாற் பிரஸ்தாபிக்கப்பட்டது.

பௌத்த விகாரங்கள் இருந்ததற்கான சின்னங் களைக்கொண்டு அந்த இடங்களிலே குறிப்பிட்ட இனத்தவர் மாத்திரம் வாழ்ந்தவர்கள் என்ற வாதம் ஏற்கக்கூடியதா?

வரலாற்றின் ஒரு காலகட்டத்தில் தமிழ் மக்களின் ஒரு பிரிவினர் சமணம், பௌத்தம் போன்ற பிற மதங்களைத் தழுவியிருந்தார்கள்.

தமிழ் பேசும் மக்களின் வரலாறு, தொல்லியல் போன்றன பூரணமாக ஆராயப்படவில்லை; நடை பெற்ற ஆய்வுகளும் அதன் முடிவுகளும் கட்டுரைக ளாக, பலரும் வாசிக்கக்கூடிய எளிய சிறு நூல்களாக வெளிவரவில்லை. இவற்றிற்கும் போதிய நிதி கிடைக் காமை ஒரு காரணமாக அமையாலாம்.

பல்கலைக்கழக மட்டத்திலே நடைபெறும் இத்த கைய ஆய்வுகளை வெளிக்கொணரத் துணைவேந்தர் வெளியீட்டுநிதி ஆரம்பிக்கப்பட்டமை போற்றவேண் டிய முயற்சியாகும்.

பூநகரி பற்றிய தொல்லியல் ஆய்வுக் கட்டுரை யொன்று, விரிவுரையாளர் ப. புஷ்பரத்தினத்தினால் அண்மையில் யாழ். பல்கலைக்கழக ஆய்வரங்கிற் சமர்ப்பிக்கப்பட்டது.

''பூநகரிப் பிராந்தியத்தின் நீண்டகால வரலாற்றினை ஓரளவிற்கு வெளிச்சம் ஊட்டும் தொல்லியல் தடயங் கள் இனம்காணப்பட்டுள்ளன'' எனப் பேராசிரியர் வி. சிவசாமி அவர்கள் இந்த ஆய்வு பற்றி விமர்சித் துள்ளார்.

தமிழர் வாழும் ஏனைய பிராந்தியங்களின் வரலா றும் தொல்லியல் அடிப்படையில் ஆராயப்பட்டு உண் மைகள் வெளிக்கொணரப்படுவது அவசியமானதா கும்; அவசரமானதாகும்!

இதில் அறிஞர் பெருமக்களின் ஒத்துழைப்பும் விடா முயற்சியும், வரலாறு, தொல்லியல் மாணாக்கரது கூட்டுமுயற்சியும் அவசியம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

## தவக்கால நற்சிந்தனை

பிணியாளியை நெருங்கிய கிறிஸ்து, ''குணமாக விரும்பு கின்றாயா'' எமது சமுதாயத் தில் பிணியாளிகள் பல நிலை யில் உள்ளார்கள். அது உடல் சார்ந்த பிணியாக இருக்க லாம். இல்லையேல் உளம் சார்ந்த, மனம் சார்ந்த பிணி யாக இருக்கலாம். உடல் ஊனம் அடைகின்றபோது, இராணுவத்தின் அடாவடித் தனத்தில், போராளிகளின் சுயநலத்தில் இன்னொரு மனி தனின் உடல் உறுப்பு சிதைக்க அல்லது துண்டிக்கப்படுகின்ற போது அது உடல்சார்ந்ததாக இருக்கின்றது. ஆனால் கட்டிய கணவன்குடிகாரனாகும்போது, மனைவி ஆடம்பரமாக வாழ்க்கை நடத்தும்போது, பிள்ளைகள் ரியூசன் என்று கூறி பணத்தையும் வாழ்க்கையை யும் பாழடிக்கின்றபோது, வயது வந்தவர்கள், இளம் சமு தாயத்திற்கு முன்மாதிரியாக இராது வாயில்வந்தபடி வம் பழக்கின்றபோது இது குடும் பத்தவர்களுக்கு, உறவினர் களுக்கு மனதிலே பிணிக் கொப்ப துன்பத்தை ஏற் படுத்துகின்றது. இப்பிணிகளில் இருந்து விடுதலைபெற மனிதன் துடியாய்த்துடிக்கின்றான். மனி தனுக்கு விடுதலை வேண்டும் ஆனால் விடுதலை கொடுக்குப் மருந்து வேண்டாம். அம் மருந்து வேறொன்றும் இல்லை இறை வார்த்தை. இறைவனு டைய வார்த்தையைக் கேட்ட 38 வருட காலமாக நோயுற்ற வன் குணமடைந்தான் எனில் ஏன்? நாம் நாளாந்தம் எப் மோடு உரையாடும் இறை வார்த்தை மூலமாக பிணி நீங் கப்படும்.

அருட்திரு அ. லோறன்ஸ்

சாவகச்சேரி.

## ஆசிரியர்களுக்கு

[மாணுக்கருக்குத் துணை புரி யக் கூடியதாக, சகல பாடங் களுக்குமான சிறுகட்டுரைகள் தொகுப்புகள், குறிப்புகள் ஆகியவற்றை ஆசிரிய களிடமிருந்து எதிர் பார்க் கிறோம் செவ்வாய்தோறும் பிரசுரிக்கப்படும்.]

— (ஆ-ர்)

# மக்கள் கருத்து

## சங்கானை அரசினர் வைத்தியசாலை

சங்கானை அரசினர் மருத் துவ மனையில் நிரந்தர வைத்தி யர் இல்லாக் குறையையும் ஏனைய குறைகளையும் அதன் அபிவிருத்திச்சபை சுட்டிக் காட்டியது.

அதேவேளை முன்னர்கடமை யாற்றிய பெண் டாக்டர் வேலையின்றி இருப்பதாகவும் அறிகிறோம். போர்நிலையினால் யாழ்ப்பாணம், தெல்லிப்பழை போன்ற பல வைத்தியசாலை கள் இயங்காதிருந்தவேளை சங் கானை வைத்தியசாலை மாத்தி ரம் இயங்கியது. அப்போது அப்பெண் டாக்டர் ஆற்றிய சேவையை மறப்பதற்கில்லை.

டாக்டர்கள் வெளிநாடு போகிறார்கள், பற்றாக்குறை என்று அடிக்கடி கூறப்படுகின் றது. ஆனால் இங்கே வேலையின் றித் தங்கியிருக்கும் டாக்டர் களின் சேவைகளை உரியமுறை யிற் பயன்படுத்தாதிருப்பது விசனத்துக்குரியது.

நோயாளிகள் கஷ்டப்படு கிறார்கள். நிரந்தர டாக்டர் நியமனம் அவசியம் தேவை. அதிகாரிகள் இதனைக் கவனிப் பார்களா?

க. வசந்தகுமாரி

சங்கானை.

# பலதும் பத்தும்

## மீண்டும் அப்'படி'!

''இப்படித் தேயலாமா அப்'படி'!'' எனத் தலையங் கம் எழுதப்பட்டதல்லவா?

இப்போது, பல இடங்களி லும் படிகளுக்குச் சீல்வைக் கும் வேலை நடைபெறுகின் றது.

பிரச்சனை இப்போதுவேறு பக்கத்திலிருந்து கிளப்பப் பட்டிருக்கின்றது.

அதிகாரம் பெற்ற முகவர் கள் சீல்வைக்கும் வேலையைச் செய்கிறார்கள். நிறை யளவை, முகத்தல் அளவைச் சட்டத்தின் கீழ் படிகள் சரி பார்க்கப்படுகின்றன. ''ஒப் பிட்டுப் பார்க்கப்பட்ட பத் திரத்தில்'', பெற்ற பணத் திற்கு ரசீதும் கொடுக்கிறார் கள்.

இதைவிடப் படிகளுக்கு மை பூச (தார் பூச) வேறோர் கட்டணமும், தராசுக் கோலுக்கு மை பூசி அடை யாளமிட இன்னோர்கட்டண மும் அறவிடப்படுவது பற்றி வர்த்தகர்களிடையே ஓர் சலசலப்பு!

இவைகளுக்குச்சட்டபூர்வ மான கட்டணங்கள் உண்டா? எவ்வளவு எனக் கேள்வி எழுப்பிஉள்ளார்கள்

அளவுக்கதிகமான கட்ட ணம் அறவிடப்படுவதாகவும் புகார் கூறப்படுகினறது.

''சட்டமும் சரியாகத் தெரியாததினால் கட்டண மும் அதிகமாகக் கட்ட வேண்டியுள்ளதே...!'' என அவர்கள் கவலைப்படுகிறார் களாம்!

வாணி

மாணுக்கர் மலர்ச்சிக்காக.... சமூகவியல்

## இலங்கையின் மீன்வளம்- வளர்ச்சிக்கு வழியுண்டா?

மக்களின் உணவிலே இருக்கவேண்டிய புரதத் தின் 63 சத வீதத்தைப் பெறுவதற்கு வாய்ப்பான வழி மீன் உற்பத்தியைப் பெருக்குவதே, நமக்கு நிறையுணவு வேண்டுமாயின் தினசரி 60 கிராம் மீன் சேர்க்கப்பட வேண்டும். ஆனால் கிடைப்பதோ மூன்றில் ஒருபகுதியே!

### மீன்வள வகைகள்

(1) உப்பு நீர் (கடல்நீர்) மீன்வளம் (2) உவர் நீர் (களப்பு நீர்) மீன்வளம் (3) நன்னீர் மீன்வளம்.

இலங்கைக்கு உரித்தான சமுத்திர எல்லை 320 கி. மீட்டராக வரையறை செய்யவேண்டுமென ஆலோ சிக்கப்பட்டுள்ளது.

இதைவிட, இலங்கையைச் சுற்றியுள்ள, சராசரி 24 கி மீ. வரை அகலமான கண்ட மேடை உண்டு; அதாவது ஆழம் குறைந்த பகுதி. இலங்கையின் வட பகுதியில் இதன் அகலம் சராசரியைவிடக் கூடுதலானது என்பது குறிப்பிடத்தக்கது. கண்டமேடையின் சராசரி ஆழம் 80 மீற்றர் ஆகும். இங்கு 'பிளாந்தன்' என்ற நுண்ணிய உயிரினம் உண்டு. ஆழம் குறைந்த பகுதியில் சூரிய ஒளி ஊடுருவிச் செல்வதால் ஒளித்தொகுப்பு மூலம் 'பிளாந்தன்' உருவாகிறது. இது மீனுக்குச் சிறந்த உணவு.

ஆறு, குளம், குட்டை போன்ற உள்நாட்டு நீர் நிலைகளிலும் மீன்வளம் உண்டு. இலங்கையில் இதன் அளவு சுமார் 777 சதுர கிலோ மீற்றர் எனக் கணக் கிட்டிருக்கிறார்கள்.

### கரையில் மீன்பிடித்தல்:

பாய்த்தோணி, வள்ளம், தூண்டில், வீச்சுவலை களால் மீன் பிடிக்கப்படுகின்றன. இப்பகுதியில், இறால், சிங்கிஇறால். சாளை நண்டு, சூடை ஆகியன ஏராள மாகக் கிடைக்கின்றன.

1976ல் இலங்கை–இந்தியக் கடல் ஒப்பந்தப்படி வோஜ் கடலடித்தள மேடை முழுவதும், பேதுறுக் கட லடித்தள மேடையின் ஒரு பகுதியும் இந்தியாவுக்குரிய வலயத்துக்குள் வந்துவிட்டன.

இறாலுக்கும், சிங்க இறாலுக்கும் வெளிநாட்டுச் சந்தையில் பெருமதிப்புண்டு.

### ஆழ்கடல் மீன்பிடிப்பு:

பாரை, சூரை, விளைமீன், சுறா, பன்னா, வஞ் சூரன், கலவாய், கூரல் போன்றவை ஆழ்கடலில் உள் ளன. தொழில்நுட்பத்துறையில் போதிய முன்னேற்றம் காணப்படாததினால் ஆழ்கடல் மீன்பிடித்துறை வளர்ச்சி யடையவில்லை. நோர்வே, ஜப்பான் போன்ற நாடுகள் நவீனகருவிகளுடன் மீன்பிடித்து, தமது தேவைக்கு எஞ்சியதை ''டின்மீனாக'' அனுப்புகிறார்கள்.

இயந்திரங்கள் பூட்டிய கலங்கள் அதிகளவு பயன் படுத்தவேண்டும். ஆழ்கடலில் மீனினங்கள் ஏராளமா கக் காணப்படும் இடங்களைக்கண்டறியும் ''எக்கோ சவுண்டர்'' போன்ற கருவிகளின் பாவனைகள் அதிகரிக்க வேண்டும்.

பிடித்த மீனைப் பாதுகாப்பதற்குரிய குளிர்சாதன வசதிகள் கொண்ட கலங்கள் பாவனைக்கு வரவேண்டும். வள்ளங்களைக் கட்டுவதற்கும், பேணுவதற்கும் வசதி யான துறைமுக வசதிகள் பெருக வேண்டும்.

### நன்னீர் மீன்வளம்:

வரால், சேற்றுக்கொண்டை, கோழிக்கொண்டை செல் கொண்டை. கெழுறு, விலாங்கு, சுங்கன், நன்னீர் சுறா போன்ற மீனினங்கள் குளம், குட்டைகளில் வளர் க்கப்படுகின்றன. இலங்கையின் மொத்த மீன் உற்பத் தியில் பத்துசத வீதத்திற்கும் குறைவாகவே நன்னீர் மீன் உற்பத்தி இடம்பெறுகின்றது. பௌத்த தர்மத் திற்கு நன்னீர் மீன் வளர்ப்பு விரோதமானது என அண்மையில் ஒரு எதிர்ப்பும் கிளம்பியுள்ளது.

சீனா, பிலிப்பைன்ஸ், மலேசியா போன்ற நாடு களிலே நன்னீர் மீன்வளர்ப்பு மிக அபிவிருத்தி அடைந் துள்ளது. உடவளவையில் உள்ள நன்னீர் மீன் அபி விருத்தி நிலைய அபிவிருத்திக்குச் சீனா உதவியுள்ளது பராக்கிரம சமுத் திரம், மின்னேரியாக்குளம், கவுதுலு வாவி போன்றவற்றில் இந்தவகை மீன் உற்பத்தி பெருகி யுள்ளது.

### அரசாங்க நடவடிக்கைகள்:

மீன்பிடிக்கலங்களை வாங்கும்போது அவற்றின் 35 சதவீதத்தை உதவிப்பணமாக வழங்குகின்றது. மீனுற்பத்தி மாவட்டங்களில் குளிரூட்டி வசதி செய்து சேமிக்க உதவுகின்றது. சந்தைப்படுத்தும் வசதிகளைச் செய்வதோடு கடன் வழங்கும் திட்டத்தை நடைமுறைப் படுத்துகின்றது. மீனவர்க்குப் பயிற்சியளித்து தொழில் நுட்ப அறிவை வழங்குகின்றது.

1952ல் மீனவத்திணைக்களம் கிரிகனயா, கலாப் பியா குளம் ஆகிய நன்னீர் மீன்வளத்தைப் பெருக்க உதவியது. 1964ல் மீன்பிடிக்கூட்டுத்தாபனம் உருவாகி யது, மீனவர் கூட்டுறவுச்சங்கங்களும் ஸ்தாபிக்கப்பட் டுள்ளன.

### மீனவர் பிரச்சனைகள்:

வள்ளம், நைலோன்வலை போன்ற கருவிகளின் பற்றாக்குறை உண்டு. படகு செய்யத் தேவையான வெட்டுமரம போன்ற மூலப்பொருட்கள் போதியளவு கிடைப்பதில்லை.

சென்ற சில ஆண்டுகளாகச் சில திடீர்ச் சட்டங் கள், தூரக்கட்டுப்பாடு, ஊரடங்கு போன்றவைகளால் மீனவத் தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டது. ஐஸ் தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டமையால் பிறமாவட் டங்களுக்கு மீனை எடுத்துச்செல்லல் தடைப்பட்டுள்ளது. குடியிருப்பு வசதியும் போதியதாக இல்லை.

நவீன தொழில்நுட்பப் பயிற்சியும், இழுகலன் (Trawler) போன்ற பாரிய முதலீட்டுக் கலன்களும் மிக அவசிய மாகின்றன.

கா. சந்திரசேகரம்

யா/நாவற்குழி ம. வி.

## பற்றிக்ஸ் தந்த பண்பாளர்

அதி. வண. பிதா. ரீ. ஏ. ஜே. மதுரநாயகம் அடிகள் தனது குருத்துவ வாழ்வின் தங்க யூபிலியை நேற்றுக் கொண்டாடினார். தற்போது கிளிநொச்சி லோங்ஸ் நிறுவனம், ஆரோபணம் என்பவற்றின் அதிபராக பணிபுரியும் இவர் 1940இல் மார்ச் 26இல் யாழ். ஆயர் கியோமோர் ஆண்டகையால் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

ஆரம்பத்தில் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் கீழ் இருந்து இறைவனுக்கு தொண்டுசெய்தார். மன்னாரில் சிலகாலம் உதவிப் பங்குத்தந்தையாகவும் வேறு பகுதிகளில் பங்குத் தந்தையாகவும் இருந்தார். சென். பறறிக்ஸ் கல்லூரியில் வார்டனாகவும் பணியாற்றினார்.

லண்டன் சென்று உயர்கல்வி பயின்று வந்த இவர் விக்கார் ஜெனரல், மேற்றிராண செயலர், பாடசாலைகளின் பொதுமுகாமையாளர் போன்ற உயர் பதவிகளையும் வகித்தார்.

அனுராதபுரம் சென். யோசப் கல்லூரி அதிபராக இருந்து பின்னர் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் பத்து வருடங்கள் அதிபராக இருந்தார். இவரது காலத்தில் சென். பற்றிக்ஸ் பல துறைகளில் புகழீட்டியது.

சென். பற்றிக்ஸ் கல்லூரியில் வண. லோங் அடிகளின் ஞாபகார்த்தமான இளைஞர் தொழிற்பயிற்சி நிலையத்தை பாடசாலைவிட்டு விலகும் வாலிபர்களுக்கு என ஆரம்பித்தார். அதிபர் பதவியில் இருந்து ஓய்வு பெறும்போது அதனை கிளிநொச்சிக்கு கொண்டுவந்து பல இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி அளித்து வருகிறார்.

- பற்றிஸியன்

## "இலங்கை அரசு எமது பலத்தை அறிந்தே பேச்சு நடத்த முன்வந்தது"

### - ஆஞ்சநேயர்

(கொக்குவில்)

"இலங்கை அரசு எம்முடன் மோதுமானால் எம்மை எவ்விதத்திலும் பாதிக்காது. உலக நாடுகளில் விடுதலைப் போராளிகள் எம்மைபபோல் நிலைத்து நிற்கவில்லை. இலங்கை அரசு எமதுபலத்தை அறிந்து எம்முடன் பேச்சு நடத்த முன்வந்தது.

வீரமரணமடைந்த லெப்டினன்ட்கந்தன், லெப்டினன்ட் காந்தி ஆகியோரின் நினைவுத் தூபி கொக்குவில் மேற்கு ஆனைக்கோட்டை வீதியில் திறந்து வைக்கப்பட்டபோது விடுதலைப்புலிகளின் அரசியல் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர் மேற்கண்டவாறு கூறினார்.

கூட்டஆரமபத்தில் திரு. த. சோமசுந்தரம் குடும்பத்தினர் கொடியேற்றி வைத்தனர். லெப்டினன்ட் முகுந்தன் குடும்பத்தினர் குத்துவிளக்கேற்றலெப்டினன்ட்காந்தியின் குடும்பத்தினர் நினைவுத் தூபியைத் திறந்துவைத்தனர். இதனைத் தொடர்ந்து வீரமரணமடைந்தோரின் குடும்பத்தினரும் மாலை அணிவித்ததைத் தொடர்ந்து மக்கள் மாலைகளை அணிவித்து தங்கள் அஞ்சலியைச் செலுத்தினர்.

திரு. ஆஞ்சநேயர் பேசும் போது கூறியதாவது:-

தமிழ் ஈழத்தில் இந்திய இராணுவம் எமது மண்ணை, இனத்தை, சொத்துக்களை அழித்துவந்தபோது எமது வீரர்களே தடுத்து நிறுத்திப் போராடியவர்கள். நம்மக்கள் அரசியல் பலம், இராணுவப் பலம் கொண்டவர்களுடன் எதிர்த்து வீரதீர சாதனைகளை நிலைநாட்டியவர்கள் நம்மவர்கள். எம்மை அழிப்பதற்குப் பலர் பல திட்டங்களைத்தீட்டி வருகின்றனர்.

நாம் எமது பலத்தை அதிகரித்துள்ளோம். இத்தனை இழப்புகளும் ஏற்படாவிட்டால் எமது இனம் அழிக்கப்பட்டிருக்கும். நாம் ஆயுதங்களைக் கையில் ஏந்திய வண்ணமே இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துகின்றோம். அரசியல் கட்சியாகவும் பதிவுசெய்துள்ளோம். எமது உரிமைகள் நிலைநாட்டப்படவேண்டும். சிங்கள இராணுவத்துடன் மோதல் ஏற்பட்டால் நாம் அஞ்சவேண்டியதில்லை. எமது பலம் அதிகரித்துள்ளதை இலங்கை அரசு உணர்ந்துள்ளது. ஆகவே எமது பலம் மேன் மேலும் அதிகரிக்க அனைவரும் ஒத்துழைப்பு நல்கவேண்டும்.

திரு. பொன் மாஸ்டர் கூறியதாவது:-

எமது தமிழ் ஈழப் போராட்டம் வலிமை மிக்கது. இப்போராட்டத்தில் எமது போராளிகள் சமூக விரோதக் குழுக்களுடனும் இந்திய இராணுவத்தினருடனும் மோதி தங்கள் உயிர்களைத் தியாகம் செய்ததினால் உருவான அமைதியே இன்றைய அமையாகும்."

திரு. நமசிவாயம் பேசும் போது கூறியதாவது:-

எமது யுத்தம் பாரதப் போர் போன்றது. எமது வீரர்கள் உலகிலேயே 4-வது பெரிய நாட்டின் படையுடன் மோதிய வீரச்செயலைக் கண்டு அஞ்சிய எமது இலங்கை அரசு புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த முன்வந்தது.

திரு. தவலிங்கம் பேசுகையில் கூறியதாவது:-

தமிழனுக்கு இன்று எதுவும் இல்லை. முன்பு பல பேச்சுவார்த்தைகளும், சட்டங்களும் காற்றில் பறந்தன. முன்புள்ளோர் பதவிக்கதிரைகளைப் பிடித்து இருந்ததேயல்லாமல் எதுவும் செய்ததில்லை. காந்தி பிறந்த அகிம்சை நாட்டில் இருந்துவந்த இந்தியப் படை காந்தியத்தை அழித்துவிட்டது.

திரு. வ. பொன்னம்பலம் பேசுகையில்; மக்கள் யாவரும் தங்கள் வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட்டு எமது சுதந்திரத்தை பாதுகாக்க எம்மை அர்ப்பணிக்கவேண்டும் என்றார்.

## இந்துமத அறிவு போட்டி முடிவுகள்

(மன்னார்)

அண்மையில் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் மகாசிவராத்திரியன்று ஆலயமடபரிபாலன சபையினரால் இந்துமதஅறிவு சார்ந்த போட்டிகள் நடாத்தப்பட்டன.

இப்போட்டியை மன்னார் மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. ஏ. ஆர். சுந்தரலிங்கம் ஆரம்பித்து வைத்தார். பரிசில்களை திருக்கேதீஸ்வர ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு. மு. ஞானப்பிரகாசம் வழங்கினார். இப்போட்டியில் பின்வருவோர் பரிசில்கள் பெற்றனர்.

பேச்சுப் போட்டி:-

ச குகவரதன் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி, இ. ஜெயக்குமாரி சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி, கு. செல்வி சிவராஜா வித்தியாலயம், சி. ஜெயக்குமாரி முருங்கன் மத்திய வித்தியாலயம்.

பண்ணிசைப் போட்டி;-

மு. உசா புனித. சவேரியார் பெண்கள் கல்லூரி அ. அருணேஸ்வரி சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி, க. ஜெயந்தி அடம்பன் ம. ம. வித்தியாலயம்.

இந்துசமய அறிவுப் போட்டி:-

ச. சுரேஷ்குமாரி சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி, சி. மயூரன் புனித. சவேரியார் கல்லூரி, எம். பாலராஜன் முருங்கன் ம. வித்தியாலயம், கா. விஜயமாலதி அடம்பன் ம. ம. வித்தியாலயம்.

கட்டுரைப் போட்டி:-

ஆர். சிவராணி தலைமன்னார் துறை அ. த. க. பாடசாலை, க. மணிமாறன் கௌரியம்பாள் திருக்கேதீஸ்வரம், ந. சிவசக்தி புனித. சவேரியார் பெண்கள் கல்லூரி.

### கிளிநொச்சி

(2ம் பக்கத் தொடர்ச்சி)

ளது.

இப் பாடசாலை ஊற்றுப் புலம் கதிரவேலு அரசினர் தமிழ் கலவன்பாடசாலை என அழைக்கப்படும், (53)

### பிரான்ஸ் உதவியது

(யாழ்ப்பாணம்)

"பிரான்ஸில் உள்ள 'ஹன்டிகாப்' நிறுவனத்தினர், அங்கவீனர்கள் பாவிக்கும் உபகரணங்களைச் செய்வதற்கான சாதனங்களை எங்களுக்குத் தந்துதவினார்கள்."

ஜெய்ப்பூர் செயற்கைக்கால் தொழிற்சாலையில் முச்சக்கர வண்டிகளை அங்கவீனர்களுக்கு வழங்கும் வைபவத்தில் உரையாற்றிய திருமதி ஈத்தா மேதர் இவ்வாறு கூறினார்.

வன்செயல் காரணமாக எமது தொழிலுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. எமது பல தொழில்நுட்பவியலாளர்கள் வெளிநாட்டுக்குச் சென்றுவிட்டார்கள் என்றார். (125)

## கஷ்ட பாடசாலை ஆசிரியருக்கு புதிய இடமாற்ற திட்டம் அவசியம்

(மருதங்கேணி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கஷ்டப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் விமோசனம் அடையும் விதத்தில் புதிய இடமாற்றத் திட்டம் ஒன்று அமுல்படுத்த வேண்டும்.

"கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளின் கல்விப்பிரச்சனை"கள் என்னும் விடயம்தொடர்பாக கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில். சர்வதேச ஆசிரியர் சங்க சம்மேளனம், பிரெடரிக் ஈபேர்ட் மன்றம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஆகியன இணைந்து நடத்திய இரண்டு நாள் கருத்தரங்கின் இறுதி நாளன்று இவ்வாறான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப் பட்டது,

இக் கருத்தரங்கில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு: கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கொத்தணிகள், கஷ்டப் பாடசாலைத் தெரிவுகள் ஆகியன மறுசீரமைக்கப்பட வேண்டும்.

கஷ்டப்பிரதேசங்களில் கடமையாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு போக்குவரத்து. தங்குமிடவசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும்.

கஷ்டப் பிரதேசத்தில் தொடர்ந்து பல ஆண்டுகளாக கடமையாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு விமோசனம் அளிக்கும் விதத்தில் இடமாற்றத்திட்டம் அமுல்செய்யப் படவேண்டும், (53)

## வலி.வடக்கில்
## வெளிநாட்டு உதவியுடன் சுகாதார வசதிகள்

(காங்கேசன்துறை)

வலி. வடக்கில் மல கூடமற்ற சகலருக்கும் மலகூடம் அமைத்து சுகாதாரவசதிகள் செய்து கொடுக்கும் திட்டம் ஐக்கிய நாணய சங்கங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வலி.வடக்குஐக்கிய நாணயங்கங்களின் சமாசத்தலைவர் திரு. சு. ஸ்ரீபாஸ்கரன் வெளிநாட்டு நிதி உதவியைப் பெற்று 1500 ரூபா செலவிலான மலகூடங்களை அமைக்க ஒழுங்கு செய்திருந்தார்.

இத்திட்டத்தின்கீழ் 1000 மல கூடங்கள் வரை அமைக்க ஒழுங்கு செய்யப்பட்டு இதில் பெரும்பகுதி அமைத்துக் கொடுக்கபபட்டுள்ளதாக தெரிவிச்சப்படுகிறது.

ஏனையோருக்கு விரைவில் அமைத்து இத்திட்டத்தை பூர்த்தி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. [86]

### உங்கள் பிரச்சனை என்ன?

**கேள்வி:** ஜேர்மன் பல்கலைக்கழகங்களிற் சேர க. பொ. த. (சா/த) பரீட்சை அல்லது க. பொ. த. (உ/த) பரீட்சையிற் சித்தியடைய வேண்டுமென்று ஒரு பத்திரிகையில் (ஈழநாடு அல்ல) வாசித்தேன் குறைந்தளவு தகுதி என்ன?

த. சண்முகசுந்தரம், யாழ்ப்பாணம்.

**பதில்:** மேற்கு ஜெர்மன் தமிழ் மாணவர் சேவையோடு தொடர்பு கொண்டு பெற்ற தகவல்கள்:

(1) குறைந்தளவு தகைமை க. பொ. த. (உ/த) பரீட்சையில் நான்கு பாடங்களிற் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(2) அதனோடு, க. பொ. த. (சா/த) பரீட்சையில் 5 திறமைச் சித்திகள் உட்பட 6 பாடங்களிற் சித்தியடைந்திருக்க வேண்டும். திறமைச் சித்திகளில் தமிழ் ஆங்கிலம் ஆகியவற்றோடு கணிதம் அல்லது விஞ்ஞானம் இடம்பெறவேண்டும்,

(3) மேலதிக விபரங்களுக்கு 30-03-90ல் காலை 9-00 மணிக்கு யா/இந்துக்கல்லூரி ஆரம்பப்பாடசாலையில் நடைபெறவிருக்கும் கலந்துரையாடலிற் பங்குபற்றவும். மேற்படிதகைமைகள் இருந்தால்.

### ஒப்பனைக் கலைஞர் பென்ஞமினுக்கு விருது

(யாழ்ப்பாணம்)

மூன்றாம் ஈராண்டுக் கால [1988 -1989] மகவம் கௌரவ விருதினை ஒப்பனைக் கலைஞர் சாமுவ பென்ஞமின் பெறுகின்றார்.

இத்தெரிவு அண்மையில் ஊரெழு, மதி அக்கடமி மண்டபத்தில் தலைவர் திரு வேல் அமுதன் தலைமையில் நடைபெற்ற இறுதித் தெரிவுக்குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

விருது வழங்கும் வைபவம் புதுவருடத்தன்று இடம பெறும்.

### அன்னதானம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மடத்துவெளி சனசமூக நிலையமும், ஸ்ரீபால சுப்பிரமணியசுவாமி தேவஸ்தான அன்னதானசபையுப மேற்படி ஆலய வருடாந்த உற்சவத்தை யொட்டி பத்து நாட்கள்அன்னதானம் வழங்கி வருகின்றனர்.

இந்தஅன்னதான சபையினரால் சென்ற வருட வரவு செலவு அறிக்கை "அமுதகலசம்" என்னும் நூல் வடிவில் வெளியிடப்பட்டுள்ளது. (101)

### குருகுலத்தில் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

குருகுலத்தால் நடாத்தப்பட்ட மூன்றுவருட சைவப் போதகர் பயிற்சியை முடித்தவர்களுக்கு சமீபத்தில் நடைபெற்ற பயிற்சி ஆசிரியர் தெரிவில் சமயத்துக்கு வழங்கப்பட்ட உச்சப் புள்ளியான 200 புள்ளிகள் வழங்கப்பட்டதாக கரைச்சி சைவ வித்தியா விருத்திச் சங்கத்தலைவர் திரு. க.துரைராசா தெரிவித்தார். இந்தப் பயிற்சியை மீண்டும் விரைவில் ஆரம்பிக்க இருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### கால்நடை வளர்ப்பு:

# சங்க உறுப்பினர்களுக்கு ரூ. 5000 கடனுதவி

(உடுவில்)

கால்நடை வளர்ப்போர் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு தலா ஐயாயிரம் ரூபாவை சுய தொழில் முயற்சிக்கு கடனாக வழங்குவது'' என யாழ்ப்பாணம் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கம் தீர்மானித்துள்ளது.

யாழ்ப்பாணம் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்க நிர்வாகசபைக்கூட்டம் கால்நடை வைத்தியர் டாக்டர் சத்தியசீலன் தலைமையில் நடைபெற்றபோது இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தில் சேர்ந்துள்ள பல இளைஞர்களும் யுவதிகளும் பணக் கஷ்டத்தினால் சுயமாக கால்நடைகளை வாங்கி வளர்க்க முடியாது கஷ்டப்படுகின்றனர் என்பதால் இவர்களுக்கு 5000 ரூபாவுக்கு குறையாமல் கடன் வழங்கி சுயதொழில் முயற்சியை ஊக்குவிப்பது என அத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் பின்வருமாறு;

யாழ்ப்பாணம் கால்நடை வைத்தியரின் தொழிற்பரப்பிற்கு உட்பட்ட பிரதேசங்களில கிளைச் சங்கங்கள் மூலம் இடங்கள் தெரிவுசெய்யப்பட்டு கோழிகளுக்கான அம்மை தடுப்பூசி, ரனிகெற், மற்றும் மாடுகளுக்கான கோமாரி தடுப்பூசி ஏற்றுதல்வேண்டும்.

யாழ்ப்பாணம் - சுன்னாகம் ஆகிய இடங்களுக்கிடையே, கோண்டாவில் கிராமத்தில் கிராமிய கால்நடை சுகாதார நிலையம் ஒன்றை ஆரம்பித்து பின்னர் ஏனைய இடங்களுக்கு விஸ்தரித்தல்.

கிராமிய கால்நடை வைத்தியர் அலுவலகத்தில் கடமையாற்ற ஒன்று அல்லது இரண்டு படித்த இளைஞர்களைத் தெரிவுசெய்து, அவர்களுக்குப் பயிற்சி அளித்தபின் நிலையத்தில் கடமையாற்ற அனுமதித்தல்.

கால் நடைகளுக்கான மருந்துகள், உணவுவகைகளை சங்கம் கொள்வனவு செய்து கிளைகள் மூலம் உறுப்பினர்களுக்கு நியாய விலையில் வழங்குதல். (109)

### மானிப்பாய் மருதடி ஆலய

# உற்சவகால போக்குவரத்து சுகாதார பாதுகாப்பு ஏற்பாடு

(பண்டத்தரிப்பு)

பிரசித்தி பெற்ற மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 29-ம் திகதி வியாழக்கிழமையன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று அடுத்த மாதம் 7-ம் திகதியன்று மஞ்சத் திருவிழாவும், 13-ம் திகதியன்று சப்பறத் திருவிழாவும், 14-ம் திகதி புதுவருடப்பிறப்புத் தினத்தன்று ரதோற்சவமும், 15-ம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன.

இவ்வருட மகோற்சவத்தை மிகச் சிறப்பாக நடாத்துவதற்கான முக்கிய ஆலோசனைக் கூட்டம் ஒன்று சண்டிருப்பாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் உதவி அரசாங்க அதிபர் திரு. கே. சிவசம்பு தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஆலய தர்மகர்த்தா சபையின் பிரதிநிதிகள், மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரதிநிதிகள், சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் (சர்வதேச) முதலுதவிப் படையின் வடமாகாண ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

உற்சவ காலத்தில் ஆலயத்தில் திரளும் பெருந்தொகையான பக்தர்களின் நலனை முன்னிட்டு விசேட பாதுகாப்பு, சுகாதார போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுப்பது என்று இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (72)

## பெண் தொண்டர்களும் பணியாற்றுவார்கள்

(பண்டத்தரிப்ப)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு கொடியேற்ற தினமான இம்மாதம் 29-ம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் உற்சவகாலம் முடியும் வரை அங்கு வரும் பெருந்தொகையான பக்தர்களின் நலனை முன்னிட்டு சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் (சர்வதேச) படையின் முதலுதவிச் சிகிச்சை முகாம் ஆலய வீதியில் இயங்கவுள்ளது.

பெண் பக்தர்களின் நலனை முன்னிட்டு இம்முறை நூற்றுக்கணக்கான படையின் பெண் தொண்டர்களும் கடமையாற்றுவார்கள் என்றும், முதலுதவியுடன் வீதி ஒழுங்கு, பாதுகாப்பு ஆகிய கடமைகளிலும் இத்தொண்டர்கள் ஈடுபடுவார்கள் என்றும் படையின் வடமாகாண ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி தெரிவித்தார்.

முதலுதவிச் சிகிச்சை நிலையத்திற்கு தேவையான மருந்துவகைகளை யாழ். பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் வழங்குவதற்கு முன்வந்துள்ளதாகவும் அறியப்படுகின்றது.

இந்த முதலுதவிச் சிகிச்சை முகாமுக்கு அம்புலன்ஸ் படையின் மாவட்ட ஆணையாளர் திரு. என். போஜன் பொறுப்பதிகாரியாகக் கடமையாறறுவார், (72)

# சுன்னாகம் சாவகச்சேரியில் சேமிப்பு வங்கிக் கிளைகள்

(பருத்தித்துறை)

இலங்கை தேசிய சேமிப்பு வங்கி யாழ். மாவட்டத்தில் அதன் சேவைகளை விரிவுபத்தி மக்களுர்குச் சேவையாற்றுவதற்கான துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இலங்கை தேசிய சேமிப்பு வங்கி கிளைகள் யாழ். மாவட்டத்தில் தற்போது யாழ்ப்பாணம், பருத்தித்துறை ஆகிய இடங்களிலுமே செயற்பட்டுவருகின்றது. மேலும் யாழ். மாவட்டத்தின் முக்கிய பகுதிகளில் இத்தேசிய சேமிப்பு வங்கியின் கிளைகள் திறந்துவைக்கப்படவுள்ளதாக இலங்கை தேசிய சேமிப்பு வங்கி உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அடுத்த மாதம் முதல் வாரத்தில் இலங்கை தேசிய சேமிப்பு வங்கியின் கிளை ஒன்று சாவகச்சேரியிலும், சுன்னாகத்திலும் திறந்து வைக்கப்படவுள்ளது. அதனைத்தொடர்ந்து இன்னும் சில கிளைகள் முக்கிய பகுதிகளில் திறந்து வைக்கப்படும்.

புதிதாகத் திறந்துவைக்கப்படவுள்ள சாவகச்சேரி தேசிய சேமிப்பு வங்கியின் முகாமையாளராக பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியின் உதவி முகாமையாளர் திரு. எம். சிவானந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய சேமிப்பு வங்கிக் கிளை முகாமையாளராக யாழ்ப்பாணம் தேசிய சேமிப்பு வங்கி உதவி முகாமையாளர் திரு. எஸ். சிவராஜா நியமிக்கப்பட்டுள்ளார். யாழ். தேசிய சேமிப்பு வங்கியில் கடமையாற்றிய திரு. எம். பரமானந்தம் பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி உதவி முகாமையாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (52)

### எதிர்காலத்தில்

## தமிழர்களுடன் முஸ்லிம்கள் கைகோர்த்து வாழ வேண்டும்''

(யாழ்ப்பாணம்)

''தமிழ் மக்களின் பிரச்சனைகளை தமிழ் மக்களும் இலங்கை அரசாங்கமும்பேச்சுவார்த்தை முலம் தீர்த்துக்கொள்ளவேண்டும். அதைவிட்டு இலங்கை இந்திய ஒப்பந்தம் மூலம் தமிழினத்துக்கு விமோசனங்கொடுப்பது போன்று பாசாங்கு செய்து, இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தனது மேலாதிக்கத்தை நிலை நிறுத்தத்தான் இந்தியா இங்கு வந்தது''.

இவ்வாறு யாழ்ப்பாணம் ஜின்னா மைதானத்தில் நடைபெற்ற விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணிக் கட்சிக் கூட்டத்தில் இக்பால் பேசும் போது கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;- ''இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. அதனாலே இரு சாராருக்கும் போர்மூண்டது. அந்தப் போரில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளை அவர்களால் தோற்கடிக்கமுடியாமல் போயிற்று''.

''இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழ்மக்களுக்கும், குடியேற்றப் பிரச்சனை, அரசியலமைப்பின் 6வது திருத்தம், இராணுவ முகாம் மூடப்படா திருத்தல், இப்படிச் சில பிரச்சனைகள் உள்ளன. ஆனல்

(7ம் பக்கம் பார்க்க)

### ''மத்தியஸ்தர்கள்

## தீர்ப்பை ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மை மாணவருக்குத் தேவை''

(உடுவில்)

''நல்ல மனதுடன் சட்ட திட்டங்களுக்கமைய தீர்ப்புக்களை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கு மாணவருக்கு ஏற்பட வேண்டும். இந்தஒரு இலக்கை நீங்கள் கைக்கொண்டால் நல்லதொரு சமூகத்தை உருவாக்கிய பெருமை உங்களைச் சேரும்''.

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகளில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ்ப்பாணம் உடற்கல்விப் பாட கல்வி அதிகாரி திரு. கே நாகமணி இவ்வாறு கூறினர்.

பாடசாலை அதிபர் திரு. வை. யோகீஸ்வரன் தலைமையில் விளையாட்டுப்போட்டிகள் நடைபெற்றன.

இளைப்பாறிய அதிபர் திரு. இ. சச்சிதானந்தம் மங்கள விளக்கேற்றி வைத்தார். உடுவில் பாடசாலைகள் கொத்தணி அதிபரும் மருதனுமடம் இராமநாதன் கல்லூரி அதிபருமான திருமதி எஸ்.எஸ். குமாரசாமி பாடசாலைக் கொடியை ஏற்றி போட்டிகளை ஆரம்பித்து வைத்தார்.

உடற்கல்வி கல்வி அதிகாரி திரு,கே. நாகமணிமேலும் கூறியதாவது,விளையாட்டுப்போட்டிகளிலிருந்து மாணவர்கள்கற்றுக் கொள்ளும் பாடம், மத்தியஸ்தர்கள்கூறும் தீர்ப்பை நல்ல மனதுடன் ஏற்றுக் சொள்வதாகும். மத்தியஸ்தர்களின் தீர்ப்புக்கு மதிப்பளித்து அதனை இறுதியானது என ஏற்றுக் கொள்வதே சிறப்பு.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மருதனுமடம் கோட்டக்கல்வி நிலையக் கல்வி அதிகாரி திரு. பொ. சிவகுருநாதன் பரிசில்களை வழங்கினர்.

343 புள்ளிகளைப் பெற்று, தனபாலசிங்கம் இல்லம் முதலாமிடத்தையும், 299 புள்ளிகளைப் பெற்று கார்த்திகேசு இல்லம் இரண்டாம் இடத்தையும், 212 புள்ளிகளைப் பெற்று சபாபதி இல்லம் மூன்றும் இடத்தையும் பெற்றுக்கொண்டன. (109)

### ''பாடசாலை வளர்ச்சியில்

## பெற்ருேர், நலன்விரும்பிகள் அக்கறைகாட்ட வேண்டும்''

(அச்சுவேலி)

''பாடசாலைகளை வளர்ச்சியடையச் செய்வதில் பெற்ருர் நலன் விரும்பிகள் கூடிய கவனம் செலுத்த வேண்டும். அப்பொழுதுதான் பாடசாலையின் முழுமையான பயனைப் பெறமுடியும.''

மருதனுமடம் கோட்டக் கல்வி அலுவலகக் கல்வி அதிகாரி திரு. பொ. சிவகுருநாதன் இவ்வாறு கூறினர்.

நவக்கிரி அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி வித்தியாலய அதிபர் திரு. ஏ. செல்லத்துரை தலைமையில் நடைபெற்றது.

போட்டியில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு கல்வி அதிகாரி திரு. பொ. சிவகுருநாதன் உரையாற்றுகையில் பாடசாலைகளைக் கண்காணித்து வளர்ச்சியடையச் செய்வதில் பெற்ருர் விழிப்பாக இருந்து செயற்பட்டால் நிச்சயம் பாடசாலை வளர்ச்சி அடையும். இந்த வகையில் நவக்கிரி அமெரிக்க மிஷன் பாடசாலைக்குபெற்ருர் வழங்கி வரும் ஒத்துழைப்பு வரவேற்கத்தக்கது.

இப்பாடசாலைக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட நிலம் பெற்ருேரின் உதவியினால் நிச்சயம் நீண்ட காலத்திற்குப் பின்னர் பயன்பாட்டிற்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றது என்ருர்.

காவேரி இல்லம் 204 புள்ளிகளைப் பெற்று முதலாம்இடத்தையும், கங்கை இல்லம் 168 புள்ளிகளைப்பெற்று இரண்டாமிடத்தையும், ஜமுனா இல்லம் 144 புள்ளிகளைப் பெற்று மூன்ருமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

### ''பயிலுநர் ஆசிரியர்கள்

## கல்வியை வளம்படுத்தி சேவையாற்ற வேண்டும்''

[பண்டத்தரிப்பு]

''பயிலுநர் ஆசிரியர்களாக பாடசாலைகளில் நியமனம் பெறுபவர்கள் தாங்கள் கடமையாற்றும் பாடசாலைகளில் கல்வியை வளம்படுத்தி சேவையாற்ற வேண்டும். ரியூட்டரி முறையிலான கல்வியை போதிக்காது பூரணத்துவமான கல்வியை மாணவர்களுக்கு வழங்குவதற்கு இவர்கள் தங்கள் முழுப்பங்களிப்பை செலுத்த வேண்டும்'

இவ்வாறு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நேற்று நடைபெற்ற சண்டிலிப்பாய் சங்கானை ஆகிய இரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பயிலுநர் ஆசிரியர்களுக்கு நடாத்தப்பட்ட தொழிற்தூண்டல் பயிற்சி வகுப்புக்கு தலைமை வகித்து உரையாற்றிய மருதனுமடம் கோட்டக் கல்விஅலுவலக பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு, ஆர். கே. குலசேகரம் குறிப்பிட்டார்.

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தெரிவான 58 பேரும், சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து தெரிவான 99 பேரும் கலந்து கொண்ட இந்த ஒரு நாள் பயிற்சி வகுப்பில் பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் உரையாற்றுகையில் ''பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை அடிப்படையாக வைத்தே பயிலுநர் ஆசிரியர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தமக்கு கிடைத்த பாடசாலைகளுக்குச் சென்று கடமைகளை பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும் என்றும் 3 வருடகால ஆசிரிய பயிற்சியைப் பெறும் காலம்வரை இப்பாடசாலைகளில் தொடர்ந்து கடமையாற்ற வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

கல்வி அலுவலர்களினல்

(7ம் பக்கம் பார்க்க)

# "விளையாட்டு உபகரணங்களுக்கு கூடுதலான நிதி ஒதுக்கப்படும்"

(சித்தன்கேணி)

''இப்பிரிவில் சிறந்த விளையாட்டு வீரர்கள் இருக்கிறார்கள். அண்மையில்நடைபெற்ற உலக விளையாட்டு விழாவில் இப்பகுதியைச் சேர்ந்த ஒருவர் இலங்கையின் சார்பில் கலந்து கொண்டு பரிசு பெற்றமை இதற்கு எடுத்துக்காட்டாகும்''

இவ்வாறு யாழ். மாவட்ட அரசாங்க செயலக தலைமைப் பீட உதவி அரசாங்க அதிபர் திரு. க. சண்முகநாதன் சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கழகங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் விளையாட்டுப்போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

மேற்படி விளையாட்டுப் போட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. து வைத்திலிங்கம் தலைமையில் சுளிபுரம் விக்ரோறியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

பிரதம விருந்தினர் தொடர்ந்து உரையாற்றுகையில்; இப்பிரிவின் விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்குவதற்கு கூடுதலானநிதியை ஒதுக்குவகற்கு முயற்சிப்பேன் என்று தெரிவித்தார்.

விளையாட்டுவிழவின் ஆரம்பத்தில் புலிக்கொடியை யாழ் மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. கே ஏகாம்பரமும் யாழ். மாவட்டக்கொடியை உதவி அரசாங்க அதிபர் திரு து. வைத்திலிங்கமும் ஏற்றி வைத்தனர்

வடக்கு கிழக்கு மாகாண விளையாட்டுப் பணிப்பாளர் திரு.எஸ் மரியதாஸும் கலந்து கொண்டார்,

வட்டுக்கோட்டைவிளையாட்டுக்கழகம் முதலாம் இடத்தையும், மாவத்தை விளையாட்டுக் கழகம் இரண்டாம் இடத்தையும், நிலாவொளி விளையாட்டுக் கழகம் மூன்ரும் இடத்தையும் பெற்றன.

சிறப்பு நிகழ்ச்சிகளுக்கான பரிசில்களை திருமதி எஸ் வைத்திலிங்கமும் மற்றைய விளையாட்டுக்களின் வெற்றிக் கேடயங்களையும் பரிசில்களையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ் மாவட்ட தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபர் திரு.க சண்முகநாதனும் வழங்கினார்கள்.

கிராம சேவை அலுவலர் வி. ரி கதிர்காமநாதன் நன்றி கூறினார். (137)

# "சேர். முத்துக்குமாரசாமி மக்களை கலாசார நெறியில் வாழச் செய்தவர்"

(உடுவில்)

''சென்னை பல்கலைக்கழகம் பேராசிரியர் ரா. பி சேதுப்பிள்ளைக்கு பட்டம் வழங்கியதால் பெருமையடைந்தது. அதேபோல சைவப்புலவர் சேர் முத்துக்குமாரசாமிக்கும் விழா எடுப்பதன் மூலம் மானிப்பாய்க்கிராமம் பெருமையடைகின்றது''

சைவப்புலவர் சேர். முத்துக்குமாரசாமியின் உருவப் படத்தை திரைநீக்கம் செய்து வைத்து உரையாற்றிய யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சரித்திரப் பேராசிரியர் திரு. எஸ் ஏ. சிற்றம்பலம் இவ்வாறு கூறினார்.

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெற்ற இவ்விழாவுக்கு திரு இராமநாதன் தலைமை வகித்தார்.

பேராசிரியர் திரு. எஸ் ஏ, சிற்றம்பலம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

எமது கலை, கலாசாரம் பண்பாடுகள் பழமை வாய்ந்தவை இவற்றை அறிய வேண்டும் என்ற அவா ஒவ்வொருவருக்கும் ஏற்பட வேண்டும். இவற்றை நன்குஅறிந்து வைத்திருந்த நாவலர், சேர்முத்துக்குமாரசாமி, பொன்னம்பலம் அருணசலம் போன்ருேர் ஆங்கிலேயர் கல்வியுடன் மதத்தையும் திணிக்க முயன்றபோது அதற்கு இடம் கொடாமல் எதிர்த்து நின்றனர். தாமும் வாழ்ந்து தம்மைச் சேர்ந்தவர்களையும் கலாச்சார பண்பு நெறியில் தவருதுவாழச் செய்தவர் திரு முத்துக்குமாரசாமி பாடப்புத்தகங்களில் இவர்கள் பற்றிய சரித்திரங்கள் இடம் பெறவேண்டும்.

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் பிரம்மஸ்ரீ என். வீரமணி ஐயர் சேர். முத்துக்குமாரசாமியின் சிறப்புக்களை தொகுத்து வாழ்த்துப்பா மூலம் வாசித்தார்.

சேர். முத்துக்குமாரசாமியின் வரலாறு பற்றிய நூலை பேராசிரியர் திரு. எஸ் ஏ. சிற்றம்பலம் வெளியிட்டு வைத்தார். முதற்பிரதியினை வைத்திய கலாநிதி தனலட்சுமி சரவணபவானந்நன் பெற்றுக்கொண்டார்.

சேர். முத்துக்குமாசாமியின் பெருமைகளைப் பற்றி திரு. ஈஸ்வரநாதபிள்ளை, திரு. எஸ். குமாரசாமி, சட்டத்தரணி இராசேந்திரன், செல்வி சந்திரிகா உட்படப் பலர் உரையாற்றினர்.

## தென்மராட்சி செய்திகள்

### விளையாட்டுப் போட்டி

சாவகச்சேரி கொத்தணி இந்துக்கல்லூரி விளையாட்டுப் போட்டி கல்லூரி அதிபர் திரு. கே சி. குகதாசன் தலைமையில் நடைபெற்றது. சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு பு. சுந்தரம்பிள்ளை பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

ஆனந்தா இல்லம் முதலாம் இடத்தையும், நேரு இல்லம் இரண்டாம் இடத்தையும், தாமோதரம் இல்லம் மூன்ரும் இடத்தையும் பெற்றன. திருமதி அ. சுந்தரம்பிள்ளை பரிசில்களை வழங்கினர்.

ஃ ஃ

### 5 பாடசாலைகள் பங்குபற்றின

கொடிகாமம் திருநாவுக்கரசு கொத்தணி மகாவித்தியாலய நிர்வாகத்திலடங்கிய இப்பாடசாலைகளின் உடற்பயிற்சி போட்டி வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

கொத்தணி அதிபர் திரு. ச. சின்னத்தம்பி தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் 5 பாடசாலைகள் பங்குபற்றின உடற்பயிற்சி அதிகாரி திரு. த. அருணகிரிநாதர் பார்வையிட்டார்.

ஃ ஃ

### பயணிகள் கோரிக்கை

சாவகச்சேரி இ. பே. ச.பஸ் நிலையத்திலுள்ள தகரகொட்டகை சேதமடைந்திருப்பதால் அதனை திருத்தியமைக்குமாறு பயணிகள் கோரியுள்ளனர்.

ஃ ஃ

### உடற்பயிற்சிப் போட்டி

சாவகச்சேரி நகர கொத்தணிப்பாடசாலைகளின் வருடாந்த உடற்பயிற்சிப்போட்டி சாவகச்சேரி புதிய மைதானத்தில் நடைபெற்றது. கொத்தணி அதிபர் திரு. க. பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் கோட்டக்கல்வி அதிகாரி திரு. சி. தியாகராசா பிரதம விருந்தினராகக்கலந்துகொண்டார்.

நீல இல்லம் (217புள்ளி) முதலாம் இடமும, மஞ்சள், பச்சை இல்லங்கள் (198 புள்ளி) இரண்டாம் இடமும் சிகப்பு இல்லம் (192 புள்ளி) மூன்ரும் இடமும் பெற்றன. நகரசபை ஆணையாளர் திரு. த. நவரத்தினராசா உரைநிகழ்த்தினர். திருமதி ந. நவரத்தினராசாபரிசில்களை வழங்கினர்.

ஃ ஃ

### பாண்டியன் முதலிடம்

நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலய இல்லங்களின் விளையாட்டுப் போட்டி பாடசாலை அதிபர் திரு. மா. சிதம்பரநாதன் தலைமையில் நடைபெற்றது வரணி கொத்தணி அதிபர் திரு. சி. துரைராஜா பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டார்.

பாண்டியன் இல்லம் முதலிடத்தையும், சேரன் இல்லம் இரண்டாவது இடத்தையும் சோழன் இல்லம் மூன்ருவது இடத்தையும் பெற்றன திருமதி துரைராஜா பரிசில்களை வழங்கினர்.

ஃ ஃ

### நினைவஞ்சலி

புதுக்குடியிருப்பில் 88மார்ச் 13ம் தேதி இந்தியப்படையினருடன் நடந்த மோதலில் வீரமரணமடைந்த கொடிகாமத்தைச்சேர்ந்த டொறின், ரேசானி ஆகியோரின் நினைவஞ்சலி விழா கொடிகாமத்தில் நடைபெற்றது. இதுவரை வீரமரணமடைந்த 1300 போராளிகள் ஞாபகார்த்தமாக 1300 மெழுகுவர்த்திகள் ஏற்றப்பட்டன அன்னையர் முன்னணி தலைவி திருமதி குணபூஷணி கமலநாதன் தலைமையில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது வீரமரணமடைந்த இருவரின் படங்கள் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டன.

ஃ ஃ

### குருபூசை

கல்வயல் பெருங்குளம் வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் தென்மராட்சி திவ்விய ஜீவன சங்க உபதலைவர் திரு க. இராசரத்தினம்தலைமையில் எறிபத்த நாயனுர் குருபூசை நடைபெற்றது.

ஃ ஃ

### 24 பேர் சித்தி

மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில், க. பொ. த உயர்தரபரீட்சையில் 24 பேர் சித்தியடைந்தனர் 19பேர் பல்கலைக்கழகம் புக தகுதிபெற்றனர்.

### விளையாட்டுப் போட்டி

கொடிகாமம் அரசினர் வித்தியாலய விளையாட்டுப் போட்டி, வித்தியாலய மைதானத்தில் அதிபர் திரு. அ. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்றது. இலங்கை வங்கி வடபிராந்திய கிளை முன்னுள் முகாமையாளர் திரு. செ. ஸ்ரீரங்கநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

### பயிலுநர்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கற்றல், கற்பித்தல் தொடர்பான விடயங்களில் கருததுரைகள் வழங்கப்பட்டன.

பயிலுநர் ஆசிரியர்களாக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான தற்காலிக நியமனக்கடிதங்களை உதவி கல்விப்பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் வழங்கினுர். (72)

### எதிர்காலத்தில்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை அரசாங்கமும் ஆயுதம் களைவதில்தான் அக்கறை காட்டி நிற்கின்றது. என்னவாக இருந்தாலும் எதிர்காலத்தில் முஸ்லிம் மக்கள் தமிழ் சகோதரர்களோடு கைகோர்த்து வாழவேண்டும். எங்களுக்குள்ளிருககும் பிரச்சனைகளை, நாங்களே தீர்த்துக்கொள்வோம். நிலத்துக்காக, பொருளாதார மேம்பாட்டுக்காக நாம் ஒன்றுபட்டு உழைத்திடுவோம்'' என்று கூறினர். (152)

"சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கம் —

# கிராமிய தொழில்முயற்சி மூலம் வேலை வாய்ப்புக்களை உருவாக்கலாம்"

(யாழ்ப்பாணம்)

''சாதாரண கிராம மக்கள் வங்கிகளில் கடன் பெற முடியாத நிலையிலிருந்த காலத்தில் ஐக்கிய நாணய சங்கங்கள் அவர்களுக்குக் கடனுதவி வழங்கியது. யாழ்.மாவட்டத்தில் சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச்சங்கத்தில் ஆரம்பத்தில் பத்து ரூபாவாகச் சேமிப்பிலிட்ட பணம் 1989ம் ஆண்டு 55 லட்சம் ரூபாவாக உயர்ந்துள்ளது. இதனுல் நாமே நேரடியாகக் கடனுதவிகளை வழங்க ஆரம்பித்துள்ளோம்.''

இவ்வாறு யாழ். மாவட்ட சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவரும், முன்னுள் கூட்டுறவு ஆக்க உதவிஆணையாளருமான திரு. எஸ். ஞானப்பிரகாசம் சாவகச்சேரி ஏற்றுமதி உற்பத்திக் கிராம மக்கள் கொம்பனியில் ஊழியர்களைக் கொண்ட சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச்சங்கக் கிளையை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

இவ்அங்குரார்ப்பணக் கூட்டம் பனை அபிவிருத்திச் சபை உள்ளகக் கணக்காய்வாளர் திரு எஸ். ஜே. ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்றது.

திரு. எஸ் ஞானப்பிரகாசம் தொடர்ந்து பேசுகையில்கூறியதாவது:- கூட்டுறவு அமைப்புத் தோன்றிய ஆரம்பகாலத்தில் கூட்டுறவுச் சங்கங்களில் ஊழல்கள் இருக்கத்தான் செய்தன. இத்தகைய ஊழல்களைக் களையவே பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டன. ஆனுல் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினுல் முழு நோக்கத்தையும் நிறைவேற்ற முடியும் என்று சொல்ல முடியாது. ஐக்கிய நாணய சங்கங்கள் பழமை வாய்ந்தன.

சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கங்கள் யாழ். மாவட்டத்தில் சிறு முதலீட்டுச் சேமிப்புடன் ஆரம்பிக்கப்பட்டன. ஆரம்பத்தில் 54 சங்கங்கள் அமைக்கப்பட்டன. அப்போது 300 பெண்கள் உட்பட 2300 பேர் அங்கம் வகித்தனர். தற்போது யாழ். மாவட்டத்தில் 410 சங்கங்கள் இயங்கிவருகின்றன. இச் சங்கங்கள் 21,000 பேரை அங்கத்தவர்களாகக் கொண்டுள்ளன. இவர்களில் 15,000 பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கிராமம்தோறும் இச் சங்ககிளைகளைத் திறந்து வருகின்ருேம். இக் கிளைகள் சிறு வங்கிகளாக மாறுகின்றன. இவ் வங்கிகளை அங்கத்தவர்களே நடத்தலாம். ஒருவர் பத்தாயிரம் ரூபாவரை கடன் உதவி பெறக்கூடியதாக உள்ளது. இதனுல் கிராமிய தொழில் முயற்சிகளை மேற்கொண்டு வேலைவாய்ப்புக்களையும் உருவாக்கமுடியும. யாழ்.மாவட்ட சமாசம் பத்துவிதமான கடன் திட்டங்களை நடைமுறைப் படுத்திவருகின்றது. இதில் வறிய மக்கள் கடன்திட்டம் முதன்மையானதாகும்''

யாழ். மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச வெளிக்கள அலுவலர் செல்வி எஸ். கலாரஞ்சினி, பனை அபிவிருத்திச் சபை உதவி உற்பத்தி உத்தியோகத்தர் திரு சே. வைரமுத்து சாகச்சேரி ஏற்றுமதிக் கிராமக் கொம்பனி முகாமையாளர் திருமதி து. இராஜேஸ்வரி ஆகியோர் சமுகமளித்திருந்தனர். திரு. வ. திரவியநாயகம் நன்றி கூறினுர். (54)

# வட்டு. கொத்தணி பாடசாலைகளின் தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை கொத்தணிப் பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையேயான தமிழ்த் தினப்போட்டிகள் வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் போட்டிக் குழுத் தலைவர் சைவப்புலவர் நா. க. தங்கரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

வட்டுக்கோட்டை கொத்தணிஅதிபர் திரு சி. டாஸ் மங்கள விளக்கேற்றி போட்டியை ஆரம்பித்து வைத்தார்.

இப்போட்டியில் சுமார் 15 பாடசாலைகள் கலந்து கொண்டன.

இப்போட்டியில் பரிசு பெற்றவர்களதும், பாடசாலைகளினதும் விபரம் பின்வருமாறு:-

முதலாம் பிரிவு

வாசிப்பு:-

தி. நிலாஜினி அராலி இந்துக் கல்லூரி, இ. தனமாலா அராலி இந்துக் கல்லூரி க. பிரமிளா வட்டு: திருஞானசம்பந்த வித்தியாசாலை.

எழுத்து:-

ஞா. கலைவாணி அராலி சரஸ்வதிம வி. இ. ஜிஞேஷா சர்மா அராலி இந்துக் கல்லூரி, ந. சரவணபவன் அராலி சரஸ்வதி ம. வி.

வசனம் எழுதுதல்:-

மு. நிவேதினி வட்டு. இந்துக் கல்லூரி, ஏ. நுசந்தா வட்டு. திருநாவுக்கரசு ம வி. ச. நிமாலினி சங்கரத்த சின்னம்மா வித்தியாலயம்.

பாஓதல்:-

து பிரியம்வதா சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலை, மு நிவேதினி வட்டு இந்துக் கல்லூரி, க, பிரமிளா வட்டு. திருஞானசம்பந்த வித்தி

இரண்டாம் பிரிவு

வாசிப்பு:-

சி துஷ்யந்தி வட்டு. இந்துக் கல்லூரி, ப காந்தரூபா அராலி இந்துக் கல்லூரி, வி கேமலா வட்டு. திருஞானசம்பந்த வித்தி,

எழுத்து:-

இ சசிகலா வட்டு. இந்துக்கல்லூரி, தி. நிமலன் வட்டு, திருஞானசம்பந்த வித்தி. பா. யஜீதா அராலி வள்ளியம்மை.

ஆக்கம்:-

இ. அமுதினி வட்டு. திருஞானசம்பந்த வித்தி. இ. மனோன்மணி அராலி சரஸ்வதி ம. வி, இ. கஜனி அராலி சாஸ்வதி ம. வி.

பாஓதல்:-

மா. ஜெயச்செல்வி அராலி சரஸ்வதி ம. வி ப. காந்தரூபா அராலி இந்துக்கல்லூரி, பே. சிவகௌரி வட்டு. திருஞானசம்பந்த வித்தி.

மூன்ரும் பிரிவு

பேச்சு:-

எஸ் ஜெகதாம்பாள் அராலி சரஸ்வதி ம. வி. சி. விஞேதினி வட்டு இந்துக் கல்லூரி. சி. சர்வாஜி அராலி இந்துக் கல்லூரி.

ஆக்கம்: (சிறுகதை)

(8-ம் பக்கம் பார்க்க)

## அமோக விளைச்சலினால்

# அரிசி விலையில் வீழ்ச்சி!

### —உணவு கூட்டுறவுத்துறை அமைச்சு

(கொழும்பு)

இவ்வாண்டு பெரும்போகத்தில அமோக நெல்விளைச்சல் ஏற்பட்டுள்ளதால், அரிசிவிலை கிலோ ஒன்றுக்கு நான்கு அல்லது ஐந்து ரூபாவால் வீழ்ச்சியடைந்துள்ளது, என்று உணவுக் கூட்டுறவுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டிலும் பார்க்க சுமார் 80 லட்சம் புசல்நெல் அதிகமாக கிடைக்கும் என்றும். இதனால் பாவனையாளர் நியாயமான விலையில் அரிசியை வாங்கமுடியும் என்றும் மேற்படி அமைச்சு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இவ்வாண்டு சுமார் 7 கோடி 30 லட்சம் புசல்நெல் அறுவடை செய்யப்படும். இதிலிருந்து சுமார் 10 லட்சம் தொன் அரிசி கிடைக்கும்.

எனவே இவ் ஆண்டு அரிசி இறக்குமதி கணிசமான அளவு குறைக்கப்படும் என்றும் அறியப் படுகிறது. (அ)

## நட்புறவு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யிலிருந்து முற்றாக வெளியேறியதையடுத்தே இப்பேச்சுக்கள் ஆரம்பமாகவுள்ளதாக அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்,

பேச்சுவார்த்தையில் தொடர்ந்து முன்னேற்றம் காணப்படும் பட்சத்தில் அமைச்சர்கள் மட்டத்தில் பேச்சுக்கள் நடைபெற்றுஇணக்கம்காணப்பட்டபின் உடன்படிக்கை கைச்சாத்திடப்படுமென்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். (சி)

# தெல்லிப்பளையிலும் கொடும்பாவி எரிப்பு

(காங்கேசன்துறை)

ராஜீவ், பெருமாள்எனகுறிப்பிடப்பட்டிருந்த இரு கொடும்பாவிகள் ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டு தெல்லிப்பளை சந்தியில் வைத்து தீயிடப்பட்டன.

மாவிட்டபுரத்திலிருந்து ஆரம்பமான இக்கொடும்பாவிகளின் ஊர்வலம் பல இடங்களுக்கும் சென்று இறுதியில் தெல்லிப்பளைச் சந்தியில் தீயிடப்பட்டன.

கடந்த சனிக்கிழமையுடன் இந்திய அமைதிப்படை பூரணமாக விலகியதையடுத்து இக்கொடும்பாவிகள் எரிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இக்கொடும்பாவிகளில் ராஜீவ், பெருமாள் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. (86)

## மேற்கு ஜேர்மன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யில் நான்குபாடங்களில் சித்தியடைந்தவர்களுமே ஜெர்மன் பல்கலைக்கழகத்துக்கு தகுதியானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (152)

## பலாலியில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பலாலி சந்தியிலும், சந்தியிலிருந்து ஸ்ரீலங்கா இராணுவ முகாம்வரையிலும். மயிலிட்டி, ஊறணி பகுதிகளிலும், காங்கேசன்துறையிலும் பல இடங்களில் புலிக்கொடிகள் ஏற்றப் பட்டுள்ளன. (86)

## இந்தியப் படை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எமது உரிமைகளை வென்றெடுக்கவும் தமிழ் மக்களைக் காப்பாற்றவும் இந்தியப் படையினருடன் விடுதலைப்புலிகள்பெரும் யுத்தத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டத்தில் நூற்றுக் கணக்கான இளைஞர்கள் தமது உயிர்களைத் தியாகம் செய்தனர். தொடர்ச்சியான இந்தப் போராட்டம் மூலமும், அரசுடனான பேச்சுக்கள் மூலமுமே இந்தியப்படையினர் இலங்கையிலிருந்து வெளியேறினர்.

வடக்கு-கிழக்கு அனைத்து மக்களதும் சுதந்திர உரிமைகளைப் பேணுவதற்காக நாம் இலங்கை அரசுடன் தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவுள்ளோம், இப்பிரச்னைக்கு நிரந்தரமான அமைதித்தீர்வு கிட்டும் வரை அரசுடன் தொடர்ந்தும் பேச்சுக்களில் ஈடுபடுவோம் என்றும் தெரிவித்தார். (சி)

## வட்டு. கொத்தணி

(7ம் பக்கத் தொடர்ச்சி)

செ. சிவபாலன் வட்டு. திருஞானசம்பந்த வித்தி, ய. ஆன் சுமித்திரா வட்டு. இந்துக் கல்லூரி, நா. கௌரி அராலி இந்துக்கல்லூரி,

ஆக்கம்: (கட்டுரை)

செ. யசோதா அராலி இந்துக் கல்லூரி, ம. சுதாஜினி அராலி இந்துக்கல்லூரி, தி. சிவரூபன் வட்டு. திருஞான சம்பந்த வித்தியாலயம்.

பாஓதல்:

மு. அருள்மகள் அராலி இந்துக்கல்லூரி, ப. பத்மரூபி அராலி இந்துக்கல்லூரி, கே. மனோரதி வட்டு. இந்துக்கல்லூரி.

நான்காம் பிரிவு. இப்பிரிவிலுள்ள சகல போட்டிகளிலும் வட்டு. இந்துக்கல்லூரி போட்டியின்றித் தெரிவானது.

### திறந்த போட்டிகள்

நடனம்: வட்டு. இந்துக் கல்லூரி.

வினாவிடை: வட்டு.இந்துக் கல்லூரி.

விவாதம்: வட்டு. திருஞான சம்பந்தர் வித்தியாலயம்.

சிறுகதை: வட்டு.திருஞான சம்பந்த வித்தியாலயம்.

கவிதை: வட்டு. இந்துக் கல்லூரி.

இசையோடு பாடல்: வட்டு. இந்துக் கல்லூரி.

நாடகம்: அராலி இந்துக் கல்லூரி. (139)

# மேஜர் சலாமுக்கு இமையாணனில் சிலை

(வடமராட்சி)

வடமராட்சியில் நடைபெற்ற மோதல்களின்போது இறுதிவரை புலிகளின் சார்பில் போராடி, வீரமரணம் அடைந்த மேஜர் சலாமிற்கு அவரின் பிறந்த இடமான இமையாணனில், அவ்வூர் மக்களால் சிலை அமைப்பதற்கான ஒழுங்குகள் நடைபெற்றுவருகின்றன.

மேற்படி சிலை, மேஜர் சலாம் இமையாணன் விளையாட்டு அரங்கு அமைந்துள்ள இடத்திற்கு அண்மையில் நிறுவப்பட உள்ளதாகத் தெரியவருகின்றது. (51)

## யாழ். நகரில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

க்கான குருமார் புடைசூழ பாப்பரசரின் பிரதிநிதி பேரருள் திரு. பக்கே யாழ். ஆயர் இல்லத்திலிருந்து அழைத்து வரப்பட்டபோது யாழ். மறை மாவட்டத் தலைவர் டாக்டர் ஜே. பி. ஸி. பிலிப் மலர் மாலை அணிவித்து வரவேற்றார்.

தமிழ் மக்களின் கலாச்சாரதுக்கு இணங்க மேளவாத்தியம் முழங்க பூரண கும்பம் வைத்து திலகமிட்டு பாப்பரசர் பிரதிநிதி தேவாலயத்தினுள் அழைத்து வரப்பட்டார்.

இதைத் தொடர்ந்து அவரது தலைமையில் கூட்டுத் திருப்பலிப்பூசை நடைபெற்றது.

தேவாலய முன்றலில் அமைந்துள்ள அரங்கில் பொது வரவேற்பு வைபவமும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன இவ்வைபவத்தில் யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட்டும் கலந்து கொண்டார். (வி)

## அடுத்த வாரம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஞாபனத்தை வெளியிடுவோம். அதில் சகல விடயங்கள் தொடர்பாகவும் குறிப்பிடப்படும்.

அதுவரை வடக்கு-கிழக்கில் சிவில் நிர்வாகம் சரியான முறையில் நடைபெற ஆளுநருக்குச் சகல ஒத்தாசைகளையும் வழங்குவோம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையில் சில முக்கிய விடயங்கள் குறித்து இவ்வாரப் பிற்பகுதியில் விடுதலைப் புலிகளின் தலைவர்கள், அமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரத்னவையும், அமைச்சர் ஜனுப் ஹமீத்தையும் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## போராட்டத்தினால்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இவ்வாறு புங்குடுதீவு கந்தசுவாமி கோயிலடியில் நடைபெற்ற அன்னை பூபதியின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய தீவுப்பகுதிப் புலிகள் அரசியல் பொறுப்பாளர் திரு. கஸ்ரோ தெரிவித்தார்.

திரு. சு. கருணாகரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், தீவுப்பகுதி அரசியல் பிரிவைச் சேர்ந்த திரு. நரேஸ் கூறியதாவது:

''எங்கள் போராட்டம் வளர்ச்சி பெற்றதற்கு, மக்களாகிய நீங்கள்தான் எமக்கு உறுதுணையாக இருந்தீர்கள். போராட்டத்திற்கு எம்மை அனுப்பியவர்களும் நீங்கள் தான். போராட்டம் இன்றுடன் நின்றுவிடாது. நீங்கள் எங்களுக்கு எந்தெந்த வகையில் உதவிகளைப் புரிந்திருக்கிறீர்களோ, அதே உதவிகளைத் தொடர்ந்தும் செய்து வரவேண்டும்'' என்றார்.

இக்கூட்டத்தில், தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் மகளிர் படைப் பிரிவைச் சேர்ந்த தீவுப்பகுதி மகளிர் முன்னணி அரசியல் பொறுப்பாளர் செல்வி சோபிகா, திரு. ப. கனகலிங்கம், டாக்டர் பேரின்பநாதன் மற்றும் பலர் உரையாற்றினார்கள்.

இவ்வைபவத்தில் கவிதாலயாவின் 'விடுதலைக் கானங்கள்' கலை நிகழ்ச்சியும் இடம்பெற்றது. (101)

## 1990ம் ஆண்டுக்கான

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குத்தான் இன்றுவரை கொடுக்கப்பட்டிருக்கிறது.

'பாதிக்கப்பட்ட வீடுகளைத் திருத்துவதற்கும், புதிதாக அமைப்பதற்கும் 762 பேருக்கு 89 லட்சம் ரூபா கொடுக்கப்பட்டுள்ளது. இந்த மாதமும் மேலும் பத்துப் பேருக்கு கொடுக்க எண்ணியுள்ளோம்.

இனிமேல் இந்த கொடுப்பனவுயாவும் கச்சேரிக்கூடாக வழங்காமல் உதவி அரசாங்க அதிபருக்கூடாக வழங்க நடவடிக்கை எடுக்கிறோம்.

முக்கியமாக வன்செயலில் மரணங்களை தழுவிக் கொண்ட குடும்பங்கள் 3719 பேர் புனர்வாழ்வு நிதிக்கு விண்ணப்பித்திருந்தார்கள். ஆனால் 2314 பேர்தான் இந்நிதி பெறுவதற்கு தகுதியானவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

பெப்ரவரி மாதம் முடிவுவரை 448 குடும்பங்களுக்கு புனர்வாழ்வு நிதி கொடுத்திருக்கிறோம். 190 லட்சத்து 80 ஆயிரம் ரூபா இவர்கள் பெற்றுள்ளார்கள்.

மார்ச் மாதத்தில் 164 குடும்பங்களுக்கு இந்தக் கொடுப்பணவை வழங்க எண்ணியுள்ளோம்.

இந்நிதியில் வன்செயலில் இறந்தவர் திருமணம் செய்திருந்ததால் 50,000 ரூபா வீதமும், 21 வயதுக்கு மேற்பட்டவர் திருமணம் செய்திருந்தால் 25,000 ரூபா வீதமும் 21 வயதுக்கு கீழ்பட்டவர்கள் 15,000ரூபா என்ற விகிதத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குநிவாரணங்கள்வழங்கப்பட்டிருக்கின்றன.

வன்செயலில் காயப்பட்டோர் 1319 பேர் விண்ணப்பித்தும் 320 பேர்தான் தகுதியானவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

பெப்ரவரி மாதம் முடிய 69 பேருக்கு இந்தக் கொடுப்பனவுகள் கொடுத்திருக்கிறோம். மார்ச் மாதத்தில் 28 பேருக்கு வழங்கப்படும். இதுவரை 8 லட்சம் ரூபா இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. (152)

## இன்று அன்னதானம்

(யாழ்ப்பாணம்)

அன்னை பூபதி நினைவாக யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகம் ஒழுங்குசெய்துள்ள அன்னதானமும், சிரமதானமும் இன்று காலை 7-00மணிக்கு கைதடி வயோதிபர் இல்லத்தில் நடைபெறும் எனப் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## இன்று அடையாள

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உண்ணாவிரதத்தை அடுத்து மாலை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரசாரக் கூட்டமும், கலை, கலாசாரப் பேரவையின் நாடகம், வில்லுப்பாட்டு ஆகியனவும் இடம் பெறும். (86)

## நினைவஞ்சலிக் கூட்டம்

(காங்கேசன்துறை)

அன்னை பூபதியின் நினைவு தின அஞ்சலிக் கூட்டம், எதிர் வரும் 29ம் திகதி, ஊறணி புனித அந்தோனியார் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

ஊறணிக் கிராம மக்களால் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள இக் கூட்டத்தில் பல பிரமுகர்கள் பங்குபற்றி அன்னை பூபதியின் தியாகம் பற்றி உரையாற்றுவர்.

அத்துடன் கலை, கலாசாரப் பேரவையில் வில்லுப்பாட்டு, நாடகம் ஆகியனவும் இடம் பெறும். (86)

# மரண அறிவித்தல்

## தயாழினி பாலராஜா

(மாணவி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி V. T. I.)

சாவகச்சேரி ஸ்ரேசன் வீதியைச் சேர்ந்த தயாழினி பாலராஜா 24-3-1990 அன்று அகால மரணமானார். இவர் பாலராஜா - பமீலா ஆகியோரின் அன்பு மகளும், ரஜனியின் அருமைச் சகோதரியும், காலஞ்சென்ற தேவபாலன், தேவானந்தன், தேவேந்திரன் ஆகியோரின் மருமகளும், விமலாவின் பெருமகளுமாவார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை 26-3-1990 திங்கள் மாலை 3-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றது.

தகவல்:-

ஜோ. தேவானந்தன்,
''தயாழலொட்ஜ்'',
ஸ்ரேசன் றோட், சாவகச்சேரி.

(சி-3648)

## திருமதி கனகம்மா மயில்வாகனம்

கொக்குவிலைச் சேர்ந்த திருமதி கனகம்மா மயில்வாகனம் காலமாகிவிட்டார். இவர் காலம்சென்ற மயில்வாகனம் (இளைப்பாறிய ஆசிரியர், கொக்குவில் இந்துக்கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும், கமலேஸ்வரி, சரஸ்வதி (இளைப்பாறிய ஆசிரியை, யாழ்/ இந்து மகளிர் கல்லூரி), இராமநாதன் (நைஜீரியா), பத்மநாதன் (பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்), இராசநாயகம் (காரியதரிசி, மேல்மாகாண சபை ஆளுநர்), அனுஷியா (ஆசிரியை, கனகரத்தினம் ம. ம. வி.), சாவித்திரி (இளைப்பாறிய ஆசிரியை, திருக்குடும்பக் கன்னியர் மடம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. வைத்திலிங்கம் (டாக்டர்), ஞானசம்பந்தன் (இளைப்பாறிய விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை), மகேஸ்வரி, கமலா, புஷ்பா (இளைப்பாறிய ஆசிரியை. புனித ஜொன்பொஸ்கோ), யோகாம்பிகை (பேராசிரியை, கொழும்பு பல்கலைக் கழகம்), கோடீஸ்வரன் (தபாலதிபர், நெடுங்கேணி), உமாமகேஸ்வரன் (இளைப்பாறிய ஆசிரியர், சேர். கனகசபை வித்தியாலயம்) ஆகியோரின் மாமியாரும், நிஷாஹரன், திருமதி குகப்பிரியை, குமரேசன். சிவைப்பிரியை, பிரதீப்குமார், சுபனு, சாரங்கன், சிறீதா, லம்போதரன், பரமதரன், பிரகாஷ், கேதீசன், செந்தூரன், ஆரணி, ஏரகன், ருஷாங்கன், சுதேஷ்ணு, சுமுகன், சேக்கிழான் ஆகியோரின் பாட்டியும், பரமனின் பூட்டியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28-03-90 புதன்கிழமை மாலை 4-00 மணியளவில் கொச்குவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;-

திரு. பத்மநாதன்

C. M. S, ஒழுங்கை,
குளப்பிட்டி வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

(சி-3635)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு பங்குனி மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.